விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 14 ஸபர் 5 இதழ் 258
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 30-10-84

## பிரதம நீதியரசராகும் முதல் தமிழர்!

(கொழும்பு)
இலங்கையின் பிரதமநீதியரசராக திரு. எஸ். சர்வானந்தா நேற்றுக் காலை 9 மணியளவில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்னிலையில் பதவிப்பிரமாணம்செய்து கொண்டார்.

இவர் நாளைக் காலை உயர் நீதிமன்றம் வைபவரீதியாக கூடும்போது அங்கு வரவேற்

(11-ம் பக்கம் 3ம்கலம் பார்க்க)

### திசைமாறும் மீனவர்கள்:

## இலங்கை—தமிழக அதிகாரிகள் 22-ல் சந்திப்பு

(சென்னை)
தமிழ்நாட்டு மீனவர்கள் திசை தடுமாறி இலங்கைகடல் பிராந்தியங்களில் மீன்பிடிக்கும்போது, அவர்கள் கைது செய்யப்படுவது மற்றும் அதனால் ஏற்படும் சகல பிரச்னைகளுக்கும் ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக தமிழ்நாடு—இலங்கை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தை அடுத்த மாதம் 22ம் திகதி கொழும்பில் நடைபெறும்.

மூன்றுநாட்கள் நடைபெறும் இப்பேச்சு வார்த்தையின் போது இதுதொடர்பான பல்வேறுவிடயங்கள் குறித்தும்

(11ம் பக்கம் 3ம்கலம் பார்க்க)

# புத்தபிக்குவின் சடலம் இன்று ஜப்பான்செல்லும்?

(கட்டுநாயக்கா)
இனந்தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட ஜப்பானிய புத்த பிக்குவின் சடலம், அவரது நெருங்கிய உறவினர்களின் வருகைக்காக, கட்டுநாயக்கா ஆஸ்பத்திரி பிரேதச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய பிக்குவின் உறவினர்கள் அநேகமாக இன்று இலங்கை வந்து சேரலாம், என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் வந்தபின், பிக்குவின் இறுதிக்கிரியைகள் பற்றித் தீர்மானிக்கப்படும்.

பிக்குவின் சடலம் ஜப்பான் நாட்டுக்கு கொண்டு செல்லப்படுமா அல்லது இலங்கையில் தகனம் செய்யப்பட்டு அஸ்தி கொண்டு செல்லப்படுமா என்பதை உறவினர்களே தீர்மானிப்பார்கள்.

மேற்படி விபரங்களை வெளியிட்ட இலங்கையிலுள்ள ஜப்பானியத் தூதரக அதிகாரி

(11ம் பக்கம் 5ம்கலம் பார்க்க)

## கத்தோலிக்க மேற்றிராணிமார் சங்கம் கண்டனம்

(கொழும்பு)
யாழ்ப்பாணத்தில் ஜப்பானிய பௌத்தமதகுரு ஒருவர் இனம் தெரியாதவர்களினால் கொல்லப்பட்டது குறித்து இலங்கை கத்தோலிக்க மேற்றாணிமார் சங்கம்கண்டனம் தெரிவித்துள்ளது.

இச்சங்கத்தின் தலைவர்

(11ம் பக்கம் 5ம் கலம்பாக்க)

## கடத்தப்பட்ட 'ஜீப்'பை ராணுவம் கைப்பற்றியது

### பலர் தாக்கப்பட்டதாக புகார்

(யாழ்ப்பாணம்)
இனந்தெரியாத நபர்களினால் நேற்று நண்பகல் கடத்திச் செல்லப்பட்ட யாழ். பல்கலைச்கழக மருத்துவபீட ஜீப் வண்டி, ரோந்து சுற்றிக் கொண்டிருந்த இராணுவத்தினரிடம் அகப்பட்டது!

கடத்திச் செல்லப்பட்ட ஜீப்வண்டி காங்கேசன்துறை வீதிவழியாகச் சென்று கொண்டிருந்த போது இராணுவத்தினரும் அவ்வழியாக வந்து கொண்டிருந்ததாகவும் கில்னர் கொலிஜ் கட்டிடத்

(11ம் பக்கம் 4ம் கலம்பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் கடத்தப்பட்டவர் . . . . . .

[யாழ்ப்பாணம்]
கிளிநொச்சியில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த எஸ். செல்வராசா நேற்றுக் காலை துப்பாக்கிமுனையில் 'அம்புலன்ஸ்' வண்டியில் கடத்தப்பட்டார்.

காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரி 6ம் வார்ட்டில் சிகிச்சை பெற்றுவந்த செல்வராசாவை

(12-ம் பக்கம் பார்க்க)

## எரிந்த நிலையில் இரு சடலங்கள்!

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு காட்டு வெளியில், பிரதான பாதைக்கு அருகாமையில் இனந்தெரியாத இரண்டு சடலங்கள் நேற்றுக் காலை எரிந்தநிலையில் காணப்பட்டன.

இரண்டு சடலங்களும் ஒன்றாக அடுக்கப்பட்டு அவற்றின் மேல் 'ரயர்கள்' போடப்பட்டு எரிக்கப்பட்டிருந்ததாகத் தெரிந்தது

நேற்று அதிகாலையில் சடலங்கள் எரிந்துகொண்டிருந்தன.

## . . . செம்மணி மயானத்தில் இறந்து கிடந்தார்!

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் வண்டியுடன் நேற்றுக் காலை கடத்திச்செல்லப்பட்ட எஸ். செல்வராசா என்பவர், செம்மணி மயானத்தில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

அம்புலன்ஸ்வண்டி நாயன் மார்கட்டுப்பகுதியில் அனாதரவானநிலையில் கிடக்கக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்ற மேலதிக நீதவான் கே பி. எஸ். வரத

[11ம் பக்கம் 5ம் கலம்பார்க்க)

## இன அமைதிக்கு யாகப்பிரார்த்தனை

### யாழ். நகரில் நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)
இன அமைதிக்காக, யாழ் நகரில் யாகப் பிரார்த்தனை நடைபெற ஒழுங்குகள்செய்யப்பட்டுவருகின்றன.

அமைதி இழந்து, பீதி குடிகொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு மனஅமைதியை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த

(11-ம்பக்கம் 4ம் கலம் பார்க்க)

### மட்டுநகர் திருமலை கைதாவோர்:

## ஜனாதிபதி - 'இராசு' சந்திப்பு: நிலைமையை விளக்கினார்

### உரிய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார்

(கொழும்பு)
மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைத்திருப்போர் குறித்து துரிதகதியில் விசாரணை நடைபெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் ஜனாதிபதிஜே. ஆர் ஜெய

[11ம் பக்கம் 4ம்கலம் பார்க்க]

### ஜப்பான் பிக்கு மரணவிசாரணை:

## "அடையாள அட்டையோ பாஸ்போட்டோ இருக்கவில்லை'

### தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]
"துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான ஜப்பான் பிக்குவின் சடலத்துடன், அவரது பாஸ்போட்டோ, அடையாள அட்டையோ இருக்கவில்லை."

ஜப்பான் பிக்குவின் மரண விசாரணையில் சாட்சியமளித்த தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு ரஞ்சித் சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மேலதிக நீதவான் கே பி எஸ். வரதராசா மரண விசாரணை நடத்தினார்.

திரு. ரஞ்சித் சில்வா மேலும் கூறியதாவது; "நேற்று முன்தினம் மாலை 5-45மணிக்கு தகவல் ஒன்று கிடைத்தது. ஜப்பான் பிக்கு மத்தியூஸ்வீதியில் சுடப்பட்டு இறந்துகிடப்பதாக அத்தகவல் இருந்தது.

"நான் அவ்விடத்திற்கு

(12ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் இளைஞர்கள் பலர் கைது

[கிளிநொச்சி]
கிளிநொச்சிப் பகுதியில் நேற்றுமுன்தினமும் நேற்றும் பல இளைஞர்கள் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று கிளிநொச்சி இ. போ. ச. மெக்கானிக் ஐயாத்துரை குகானந்தன் என்பவர் பஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினமும் பலர்கைது செய்யப்பட்டனர். கைதாகி

[12-ம் பக்கம் பார்க்க]

### மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆரம்பம்

## மாணவிகள் தொகை: 1,500 வகுப்புக்கு வந்தவர்கள்: 50!

(புலோலி)
பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி நேற்று மீண்டு ஆரம்பமான போது 50 மாணவிகள் மட்டுமே வந்திருந்தனர்.

இக்கல்லூரியில் 1500 மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர். நேற்று 50 மாணவிகள் மட்டுமே வந்தனர்.

பருத்தித்துறையில் ஏற்பட்ட பதட்ட நிலையைத் தொடர்ந்து இக்கல்லூரி உட்பட சகல பாடசாலைகளும் மூடப்பட்டன.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நவம்பர் மாதம் முதலாம் திகதி திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

(க)

## 'ஊருக்குப் புதியவர்' இறந்து கிடந்தார்!

(யாழ்ப்பாணம்)
அரியாலையில் நேற்றுக் காலை ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு பலியானார். இவரது சடலம் அடையாளம் காணப்படவில்லை.

யாழ் நீதவான் எஸ். நாகராசா, நேற்றுக் காலை சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டபின் மரணவிசாரணையை ஆரம்பித்தார்

இறந்தவர் ஒரு தேயிலை வியாபாரி என்றும், அப்பகுதிக்குப் புதியவர்என்றும் கூறப்

(12ம் பக்கம் பார்க்க)

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

றக்கா வீதியில் Bosco பாடசாலைக்கு அண்மையில் 1 பரப்பு வெறுங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- மகேசன், (சட்டத்தரணி) வைமன் வீதி. 484

கே.கே.எஸ். வீதி மருதனார் மடம் சந்தியில் வியாபாரஸ்தாபனமாகவோ/ வேறு தேவைகட்கு யன்படக்கூடிய ஒரு பரப்புக்காணி மாடிக் கட்டட அமைப்புக்குரிய தளத்துடன் கீழ்மாடி பூர்த்தியான நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: உ. சந்தானகிருஷ்ணன், உடுவில்மகளிர் கல்லூரி, சுன்னுகம். 448

நல்ல நிலையில் உள்ள HONDA CD 90 (88 Sri 4633) உடனடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க:- A.P.S. ஜெயநாதன், 145, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (எ. எவ். ரேமன்ஸ்க்கு அருகில்) 496

கிளிநொச்சியில் கண்டிறோட்டில் வீடுகள் கடைகள் கட்டக்கூடிய மேட்டுக்காணியும் நெற்காணியும் (ஒரு ஏக்கருக்கு இரண்டு போகத்திற்கு 160 புசல் விளைகிறது.) உடன் விற்பனைக்குண்டு. எழுத்துமூலம் விளம்பரகாரனுக்கு தொடர்பு கொள்ளவும். மே/பா முகாமையாளர், செல்லக்குட்டி புத்தகசாலை, சாவகச்சேரி. 495

சங்கானையில் பஸ்தரிப்பு நிலையம், சிவப்பிரகாச வித்தியாலயம் என்பவற்றிற்கு அண்மையில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- த. அரியரத்தினம், ''இரத்தின நிதி'' மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். 490

## வகுப்புக்கள்

ஹவுஸ் வயறிங், வெல்டிங். மோட்டர் மெக்கானிசம் குறுகியகால பயிற்சியுடன் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். புதிய பிரிவுகள் ஆரம்பம் 31-10-84 J. E. C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 479

## விற்பனைக்கு

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கருகாமையில், யாழ்ப்பாணம் காரைநகர் வீதியில் போக்குவரவு, சுற்றிவர மதில், கிணறு. சுற்றிவர குடி அமர்வுகள் உள்ள 2½ பரப்புக் காணியும், மானிப்பாய் தாவடி வீதியில் தாவடி உப தபால் அலுவலகத்துக் கருகாமையில் கிணறு, போக்குவரவு வசதிகளோடு 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. இன்றே தொடர்பு கொள்ளுங்கள். ''சிவாஸ்கந்தா ஏஜென்சி'', தலைமையகம்: 75, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22673. கிளை: நில்கந்தா, மானிப்பாய் மகளிர்கல்லூரிக் கருகாமையில், மானிப்பாய். (493)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கு மிகக் கிட்டவாக மாணவிகளுக்கு சாப்பாட்டுடன்/சாப்பாடில்லாமல் அறைகள் உண்டு. 148, சேர். பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். 491

# வடபகுதி அபிவிருத்தியில் நெதர்லாந்து ஆர்வம்

## முல்லை கிராமிய ஒருங்கிணைப்புத்திட்டத்திற்கு ஆறரைக்கோடி உதவி

[கொழும்பு]

ஆறரை கோடி ரூபா செலவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நெதர்லாந்து அரசினுதவியுடன் மேற்கொள்ளப்பட இருக்கும் அபிவிருத்தித் திட்டம் குறித்து மேலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக விசேட குழுவொன்று கொழும்பு வந்து திரும்பியுள்ளது. தெற்காசிய நாடுகளுக்கான உதவித்திட்டங்களுக்குப் பொறுப்பான திரு. வில்டபோர் தலைமையில் இங்கு வந்தகுழு இலங்கையில் உள்ள தூதரக அதிகாரிகளுடன் இணைந்து திட்ட அமுலாக்கல் அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி ஏ. எஸ். குணசிங்கத்துடனும் மற்றும் உயர் அதிகாரிகளுடனும் பேச்சு நடாத்தியது.

முல்லைத்தீவு மற்றும் வடபகுதி மக்களின் தேவைகளை கேட்டறிந்துகொண்ட இக்குழுவினர் வடபகுதியின் அபிவிருத்திக்கு தம்மாலானஉதவிகளைச் செய்யவிரும்புவதாக மிகவும் ஆர்வத்துடன் தெரிவித்தனர் என கலாநிதி குணசிங்கம் தெரிவித்தார்.

கிராமிய ஒருங்கிணைப்பு அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ஏழு ஆண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த அபிவிருத்தி வேலைகள் 85-ம் ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்க இருக்கின்றன. விசுவமடு' முத்தையன்கட்டு குளங்கள் புனரமைப்பு விவசாய பயிற்சி நிலையம், ஆசிரியர்களுக்கான விடுதிகள், பிராந்திய கல்வி நிலையம், பாடசாலை கட்டடங்கள், உரக் களஞ்சியம் அமைத்தல், கிராமிய மின்சாரம், மீன்பிடி, கால்நடை விருத்தி ஆகிய அபிவிருத்தி நடவடிக்கைகள் இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் என்றும் கலாநிதி குணசிங்கம் தெரிவித்தார்.

# அச்சுவேலியுடன் தொடர்பு துண்டிப்பாம்

(கொழும்புத்துறை)

அச்சுவேலி தன்னியக்கத் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் ஐந்து மாத காலமாகப் பழுதடைந்து போய்க் கிடக்கின்றது.

இத் தொலை பேசிச் சேவையை மீண்டும் செயற்படச் செய்யுமாறு அச்சுவேலி லயன்ஸ் கழகம் கோரியுள்ளது.

கடந்த மே மாதம் 28ம் திகதி அச்சுவேலித் தபால் நிலையத்துக்கு அருகில் நடைபெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அச்சுவேலி தன்னியக்கத்தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் பழுதடைந்தது. அன்றிலிருந்து இந் நிலையம் இயங்காததினுல் அச்சுவேலியில் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

தற்காலிகமாக அச்சுவேலி தபால் நிலையத்துக்கேனும் யாழ்ப்பாணத்துடனுன நேரடித் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தி தருமாறு அச்சுவேலி லயன்ஸ் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

பரு. மாவட்ட நீதிபதி இல்லம்:

# உத்தியோகபூர்வமாக மட்டுமே ஏற்கப்படுமாம்!

## நீதிபதி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்டுவரும் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் தகுந்தவகையில் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டாலன்றித் தாம் அந்த இல்லத்தை ஏற்கப்போவதில்லை என்று பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ரி. ஜோகநாதன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் 10-ந் திகதி இராணுவத்தினரும் கமாண்டோ பொலிசாரும் தற்போது பாவித்துவரும் பருத்தித்துறை வாடி வீடு, மாவட்ட நீதிபதியின் இல்லம் போன்ற கட்டிடங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்துக் கருத்து வெளியிடும்போதே பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ஜோகநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இராணுவத்தினர் தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை பாவிக்கத் தொடங்கியதையடுத்து தமக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள், மற்றும் அங்கிருந்தும் தமது சில பாவனைப் பொருட்கள் காணுமல் போனது குறித்துப் பொலிஸ் மாஅதிபர் கவனத்துக்குத் தாம் கொண்டுவந்ததாகவும், ஆனுல் இதுகுறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும் எனவே தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தைத் தம்மிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தால் மட்டுமே தம்மால் ஏற்க முடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

திரு. ஜோகநாதன், இது தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவிடமும் தாம் புகார் செய்துள்ளதாகக் கூறினுர். (கி)

# முதலிலே முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த அருணசலம் தம்பையாவின் மரணசாதன விடயமாய் மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } 1209/ரீ

1. செல்லப்பா துரைராஜா
2. பெண் சரஸ்வதி, இருவரும் நாகப்பர் வளவு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

மனுதாரர்கள்

மேற்படி இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்கு மேற்படி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும், 1984ம்ஆண்டு ஆவணி மாதம் 28-ந்திகதியன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1984ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19 ந் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்
பதிவாளர்.

வரைவு:
பொ. குமாரசாமி
மனுதாரர்களின் சட்டத்தரணி. 440

இதோ!

# ''காமதேனு

சுத்திகரிக்கப்பட்ட பால்—பைக்கெட்டுகளில்!!
குழந்தைகளுக்கும்! முதிர்ந்தவர்களுக்கும்!!

★ இலகுவில் செமிக்கக்கூடியது
★ அதிக போஷாக்குள்ளது
★ சகல தேவைகளுக்குமுகந்தது
★ இலகுவில் கிடைக்கக்கூடியது
★ மாப்பொருட்களைவிட மிகச்சிறந்தது
★ பத்து நாட்கள் வரை பழுதடையாமல் வைக்கக்கூடியது

என்ற உத்தரவாதத்துடன் விற்பனையாகின்றது

மற்றும் ★ யோக்கட் ★ சுவையூட்டிய பால் ★ தயிர் ★ நெய் யாவும்
எமது பகுதி உற்பத்திப் பொருட்களே
மறந்துவிடாதீர்கள்!!

உங்கள் ஒத்துழைப்பை நல்கி ஊக்கமளிக்க வாரீர்!!

பால்சபையின் தொழிற்சாலை
கிளிநொச்சி, (366)

ACR ASIAN TRAVELS



★ பாஸ்போட் ★ விசா
★ ரவலர்ஸ் செக்
★ விமான ரிக்கற்

யாவும் துரித கதியில் பெற்றுக்கொள்வதற்கும்,
சர்வதேச நேரடித் தொலைபேசி தொடர்புகள்
தாமதமின்றி உடனடியாக பெற்றுக்கொள்வதற்கும்
எம்முடன் தொடர்பு கொள்ளவும்

ஏசி ஆர் ஏசியன் ரவல்ஸ்
130, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23629 (நேரடிச் சர்வதேச தொடர்பு) (487)

JAFFNA COLLEGE

Wanted trained teachers for the Primary School (Grades 1 — 5). Teachers with experience will be given preferance. Apply on forms available at the College office on or before the 17th November, 1984.

JAFFNA COLLGE, VADDUKODDAI.

A. KADIRGAMAR, Principal. (492)

BECON STUDY CENTRE
(ஸ்ரீதர் முன்பாக)
DAY CLASS
நடைபெறுகின்றது
தூயகணிதம்:- தொடர், நுண்கணிதம்
பிரயோக கணிதம்:- எறியம், உராய்வு
ஆசிரியர்:
A. பத்மநாதன்

# இந்தியாவின் அண்டை நாடொன்று ஆயுதங்களை பெருமளவில் வாங்குகிறது!

## ஏடனில் இந்திய ஜனதிபதி தகவல்

புதுடில்லி, ஆக. 29

“இந்தியாவின் அண்டை நாடொன்று பெருமளவில் அதி நவீன இராணுவ ஆயுதங்களை வாங்கிக்குவித்து வருகின்றது” என்று இந்திய ஜனதிபதி திரு. ஜியானி ஸெயில்சிங் தெரிவித்தார்.

திரு. ஸெயில்சிங் ஏடனுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அங்கு அவர் வைபவமொன்றில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு.ஸெயில்சிங் தொடர்ந்து கூறியதாவது:- ‘‘இந்தியாவின் அண்டை நாடொன்று பெருமளவில் அதி நவீன இராணுவ ஆயுதங்களை கொள்வனவு செய்து வருகின்றது. இதனல் இந்துமாகடல் பிராந்தியத்துக்கே பெரும அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்தியா அதன் அண்டை நாடுகளின் உள்விவகாரங்களில் குறுக்கிடுவதை விரும்பவில்லை. அத்துடன் அயல்நாடுகளில் இராணுவஅச்சுறுத்தல்களையும் இந்தியா மேற்கொள்ளவிரும்பவில்லை.

திரு. ஸெயில்சிங் நீண்டகால இந்திய-அரபு உறவுகள் குறித்தும் பிரஸ்தாபித்தார். ஏடனில் இந்திய சமூகத்தவரையும் சந்தித்தார்.

அணிசேராக் கொள்கைகளை இந்தியாகடைப்பிடிக்கும்விதம் குறித்தும், அவ்வியக்கத்தின் தலைவியான திருமதி இந்திரா காந்திக்கும் ஏடன் அரசாங்கம் ஜனதிபதி ஸெயில்சிங் மூலமாக பாராட்டுத் தெரிவித்தது. [கி]

## இலங்கை ஞாயிறு

சென்னை, அக். 29

சென்னையில் நேற்று கத்தோலிக்க சேர்ச்சுக்களின் மாநாடொன்று நடைபெற்றது. இம் மகாநாட்டில் மாதத்தின் முதல்ஒவ்வொரு ஞாயிற்றுச்கிழமையையும் ‘இலங்கை ஞாயிறு என அழைப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

இலங்கையில் தமிழர்கள் படும் இன்னல்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும்வகையிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை இலங்கை அரசாங்கம் இனப்பிரச்னையைத் தீர்த்துவைப்பதில் ஏற்படுத்திவரும் காலதாமதத்தையும் இம் மாநாடு கண்டித்தது. இலங்கைக்கு வெளிநாடுகள் உதவியளிப்பதை நிறுத்தவேண்டுமென்றும் இங்கு கேட்கப்பட்டது.

ஜெனீவாவில் இலங்கை அகதிகளுக்கு உதவியளிக்கும்படியும் வேண்டுகோள் விடுத்து இம்மாநாட்டில் தீர்மானம் இயற்றப்பட்டது. (கி)

### மேற்கு ஆபிரிக்கப்பட்டினி:

## ஐரோப்பாவிலிருந்து 20 ட்ரக்குகள் நீண்ட உதவிப் பயணம்!

### இரு தொலைக்காட்சி கம்பனிகள் ஏற்பாடு

லண்டன், ஆக. 29

கடும் வரட்சியினல் பாதிக்கப்பட்டுள்ள மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு ஐரோப்பாவில் இருந்துமிகநீண்ட ‘ட்ரக்’பயணமாக உதவிப் பண்டங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சுமார் 20 ட்ரக் வண்டிகள் உணவு மற்றும் மருந்து, பிஸ்கட், ஏனைய போஷாக்குப் பொருட்களை ஐரோப்பாவில் இருந்து மேற்கு ஆபிரிக்காவுக்கு நீண்ட பவனியாக ஏற்றிச் சென்றன.

இந்த நீண்ட உதவிப் பவனியை ஐரோப்பாவின் இரு பெரும் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒழுங்கு செய்துள்ளன. இந்நிறுவனங்கள் மேற்கு ஆபிரிக்க பட்டினி நிலைமை குறித்து தீவிர பிரசாரஞ் செய்தன. இதன் வாயிலாகக் கிடைத்த நிதி உதவியைக் கொண்டே இந்த நீண்ட பயணம் ஒழுங்குசெய்யப்பட்டது.

சுமார் 5 ஆயிரம் கிலோ மீட்டர்களைத்தாண்டி இப்பயணம் இடம்பெறும். பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை சென்றடையஇந்த ட்ரக் பயணத்துக்கு 11 தினங்கள் பிடிக்கும் என்று கூறப்பட்டது.

மாலி, மொறிட்டானியா உட்பட வரட்சி, பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ள பல மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு இந்த உதவிகள் விநியோகிக்கப்படும். [கி]

## பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் மீண்டும் விநியோகம்!


(யாழ்ப்பாணம்)

பிறப்பு அத்தாட்சி பத்திரம் வழங்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக விசேட ஏற்பாட்டின்படி பிறப்பு அத்தாட்சி பத்திர கடதாசி பெறப்பட்டுள்ளதாகவும்யாழ்பிரதிப்பதிவாளர் திரு. இராசையா நேற்றுத் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு மாதகால விண்ணப்பங்கள் தேங்கியிருப்பதாகவும் இவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினர்.

பிரதி பண்ணும் யந்திரம் கொள்ளை யடிக்கப்பட்டுவிட்டதால் தற்போது கைகளால் எழுதியே பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது. (க)

## அமெரிக்க ஜனதிபதி




தேர்தல்—84

### மொண்டேலாக நடித்தவருக்கு ‘ஷட் அப்’

ஜனதிபதி திரு. றீகன் தமது எதிர்க்கட்சி வேட்பாளரான திரு. வோல்டர் மொண்டேலுடன் பகிரங்க தொலைக்காட்சி விவாதம் நடத்தியது தெரிந்ததே.

இந்த விவாதத்துக்கென 4 தடவைகள் 90 நிமிட நேரம் றீகன் ஒத்திகை பார்த்துள்ளார். இந்த ஒத்திகையின் போது றீகனின் பட்ஜட் இயக்குநரான டேவிட் ஸ்ரொக்மன் என்பவரே மொண்டேலாகத் தோன்றினர்.

ஒத்திகைதானே? றீகன் விளையாட்டாக நடந்து கொண்டார். ஆனல் ஸ்ரொக்மனுக்கோ றீகன் மீது ஆத்திரம் கேள்விகளைச் சரியாகக் கேட்கிறரில்லை விவாதத்தில் கவனமில்லை. சிறுபிள்ளைத்தனமாக நடக்கிறர் என்று புறுபுறுத்தார். றீகன் மீது கடுமையாகப் பேசவும் தொடங்கினர்.

இறுதியாக ஸ்ரொக்மன் நடந்துகொண்டதைப் பார்த்து அந்த ஒத்திகையின்போது ‘ஷட் அப்’ என்று குறும்பாக றீகன் எச்சரித்தார். மொண்டேலுக்கும் இப்படித்தான் நடக்குமாக்குமென்று இந்த ஒத்திகையைப் பார்த்தவர்கள் றீகனுடன் சேர்ந்து பலமாகச் சிரித்தனர்.

### றீகனின் வயதுப்பிரச்னை

திரு. றெனல்ட் றீகன், திரு. மொண்டேல் ஆகியோரின் உடல் அமைப்பையும், அவர்களது தொலைக்காட்சி விவாதத்தின்போது சுமார் 50 மில்லியன் அமெரிக்கர்கள் கூர்மையாக அவதானித்தனர்.

திரு. றீகனில் கணிசமான அளவு வயோதிபத்தின் சாயல் தென்படுகிறது. மொண்டேல் இளமையாக இருக்கிறர் என்பதே பலரின் கருத்து. இதனல் திருமதி றீகன் வேதனைப்படுகிறராம். கணவனின் பிரசாரத்தை வயதுப்பிரச்னை குழப்பிவிடுமோ என்பது அவரின் கவலை.

ஆயினும் றீகனின் டாக்டர்கள் 73 வயதிலும் அவர் சிறந்த உடல் நிலையில் இருப்பதாகக் கூறியுள்ளனர். காது கேட்கும்தன்மை அவரிடம் வெகுவாகக் குறைந்துவருகின்றபோதிலும் பல விடயங்களை அவரால் கிரகிக்கமுடிகின்றதெனவும், தகுதிநிலையும் உறுதியாக இருப்பதாகக் கூறினர்.

மொண்டேலுக்கு வயது 56 ஆகும் இரத்த அழுத்தம் இவரிடம் கூடுதலாக இருக்கிறதென்றும் மருந்து வகைகளால் இதனை அவர் கட்டுப்பாட்டில் வைத்துள்ளதாகவும் டாக்டர்கள் தெரிவித்தனர். (கி)

## தேர்தல் செய்திகள்


உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

# லங்கா சீமெந்து
# LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

‘லங்கா சீமெந்து’ ‘LANKA CEMENT’

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

## ‘லங்கா சீமெந்து லிமிட்டட்’
## LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது ‘லங்கா சீமெந்து’

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605



### மணிவாக்கு

அறியாமை ஆண்டவனின் சாபம்; அறிவோ
விண்ணை நோக்கி நாம் பறக்கும் இறக்கை.

—ஷேக்ஸ்பியர்

## நமது நோக்கு

# புதிய பிரதம நீதியரசர்

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" என்று ஆரம்பமாகின்ற வரிகளோடு தமிழுக்குக் கிடைத்த ஒரு நல்ல பாட்டு இந்நாட்டின் பிரதம நீதியரசராக நியமனம் பெற்றிருக்கும் முதலாவது தமிழர் நீதியரசர் சர்வானந்தாவிற்குமிகப்பொருத்தமாகும்.

இப்பாட்டின் ஆராய்ச்சியில் ஈடுபட்டால் நாம் சொல்ல முயன்ற கருத்து மறைந்துவிடும்.

தருமிக்கு இறைவன் எழுதிக் கொடுத்ததாகக் கூறப்படும் அந்தப்பாடலின் கதாநாயகனாக வண்டு அமைக்கப்பட்டிருக்கிறது எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் மணத்தைப் பற்றியது. கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா? இல்லையா என்கின்ற விவாதம்.

'மணம் இல்லையா?' என்று கேட்டவர் இறைவன்.

'இல்லை' என்கிறார் நக்கீரர். உத்தமமான பெண்களுக்குக் கூட இல்லையா' என்று கேட்கிறார். ஆமாம் இல்லை என்கிறார் நக்கீரர்.

பிறகு, தேவ மாதர்களுக்கும் இல்லையா? என்கிறார். 'இல்லை' என்றே சொல்லுகிறார் நக்கீரர்.

உமையவளின் கூந்தலுக்கும் மணமில்லையா? என்று கேட்கிறார். நக்கீரர் 'இல்லை' என்றே கூறுகிறார்.

ஆத்திரம் அடைந்த சிவபெருமான் சாபமிடுகிறார். பொற்றாமரைக் குளத்திற்குப் போய் சாபவிமோசனம் பெறுகிறார் நக்கீரர் என்று கதை முடிகிறது.

நீண்ட அறிமுகமென்று முணுமுணுப்பவர் இதில் பொதிந்திருக்கும் தெய்வீக உண்மையையும், எக்காலத்துக்கும் பொருத்தமான கருத்து, இக்காலத்தில் இந்நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கு எவ்வித பொருத்தமுடையதென்பதை உணரத் தவறமாட்டார்கள்.

ஜனநாயக நாட்டில் நீதிநெறி பேணப்படுவதின் அருமையையும் அதற்கு ஏற்படக்கூடிய இடர்களையும் நன்கு அலசிவந்த நாம் இத்துறைக்கு தலைமை வகித்த நியமனம்பெற்றவர் அறிவு ஆற்றல், அஞ்சா நெஞ்சம், சமநோக்கு எல்லாவற்றிற்கும் மேலாக அடக்கம் என்ற பண்புகள் சேர்ந்த பெருமகனார் என்றால் நல்ல திருப்பம் வேண்டுமென்று தவிக்கும் நாட்டுக்கு இது ஒரு அறிகுறியெனலாம்.

கிராமத்தில் பிறந்து கிராமத்தில் வளர்ந்து இந்த நாட்டின் மிக உயர்ந்த பதவியை ஏற்றிருக்கும் திரு. சர்வானந்தா இந்தப் பெருமைக்குரிய பண்புகள் அத்தனையும் பெறுவதற்கு அவருடைய கல்வி கேள்வி சான்றோர் இணக்கம் ஆகியன உதவியதாகக்கொள்ளலாம்.

'அடக்கம்' என்றால் அநேகமாகப் பணிவைத்தான் குறிக்கும். வள்ளுவர் குறளில் அடக்கம் என்பது, மெய்யும் மொழியும் மனமும் தீநெறியில் செல்லாமல், அடங்கி நிற்றல். அந்த அடக்கத்தினின்று, நடத்தையில் பணிவும் தானாக உண்டாகும்

பிரதம நீதியரசர் சர்வானந்தா இப் பெருங்குணங்களுக்குஉறைவிடமாகவிருப்பதோடு ஆற்றலும் அனுபவமும்நிறைந்தநீதியரசராகையால்,இன்றுதகைமைக்கு முதலிடம் இல்லையே என்று குறைபட்டுக்கொள்பவருக்கு இச்செய்தி ஆறுதல் அளிக்கும்.

துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் பொதுவாக நாட்டையும் சிறப்பாக நீதித்துறையையும் சீர்கெடுக்கும் சமயத்தில் இந்த நியமனம் நாட்டுக்கு ஒரு நல்லகாலம் ஏற்படுகிறதென்று நினைக்க உதவுகிறது.

தக்க நேரத்தில், தகைமையுடையாருக்கு தகுந்த பணியை உதவுவது நல்லாட்சியின் முதற்பணி.

---

### அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

# கோக்கா கோலாவா? பெப்ஸி கோலாவா?

## வெற்றி எந்தப்பக்கம்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது.

கோக்கா கோலாவுக்கும் பெப்ஸி கோலாவிற்கும் இடையே தேர்தல் போட்டி உக்கிரமடைந்து வருகிறது.

ஆம்-

உத்தியோகபூர்வமான போட்டி குடியரசுக்கட்சிவேட்பாளர் ஜனாதிபதி றீகனுக்கும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் வோல்டர் மொன்டேலுக்கும் இடையே இருந்தாலும், இவர்கள் சார்பில் மோதுவது இந்த ''சோடாக்கம்பனிகள்'' அள்ளி வீசும் பெருநிதி தானம்.

இந்தத் தகவலை பி-பி-ஸியின் தொலைக்காட்சி அண்மையில்ஒருவிசேஷசஞ்சிகை நிகழ்ச்சி மூலம் புட்டுவைத்துள்ளது. குறைந்த பட்சம் கடைசி 25 வருட காலமாக இடம்பெற்ற சகல ஜனாதிபதித் தேர்தல்களிலும் 'கோக்' கின் பணம் 'பெப்ஸி' யின் பணத்தோடு மோதியதாம். கோக்கோ கோலா கம்பனி குடியரசுக் கட்சி வேட்பாளர்களுக்கும் பெப்ஸி கோலா கம்பனி ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுக்கும் பணத்தை வாரி இறைத்துள்ளனவாம். அமெரிக்க ஜனாதிபதியையும் அவரது கொள்கைகளையும் கூட இந்த சோடாக்கம்பனிகள் சில வேளைகளில் ஆட்டிப்படைக்குமாம்.

அண்மையில் அமெரிக்க டி.வி. யில் நடைபெற்ற றீகன் மொன்டேல் ஒன்றரை மணி நேர விவாதத்தை பிபிஸி. டி. வி. முற்றாக ஒலிபரப்பியது. பாதுகாப்புக் கொள்கை முதல் கருச்சிதைவுக் கொள்கை ஈறாக பல அம்சங்கள் பற்றி இருவரும் மூன்று பேட்டியாளர்கள் ஒரு நடுவர் மூலமாக விவாதித்தனர். ஒரே மேடையில், ஒவ்வொரு பக்கத்திலும் ஒருவராக, ஒருவரை ஒருவர் ஓரளவு நோக்கிய நிலையில் ஒலிவாங்கி முன் இவர்கள் நின்றனர். இவர்களுக்குச் சற்றுத் தொலைவில் 3 பேட்டியாளர்களும், அவர்களுக்கு அப்பால் நடுவரும் அமர்ந்திருந்தனர் அரங்கு நிறையப் பார்வையாளர்கள்.

— உதய தாரகை —

பேட்டியாளர்கள் ஒரே கேள்வியை இருவரிடமும் மாறி மாறிக் கேட்க, ஒருவர் கருத்துக்கு மற்றவர் பதில் கூறும் பாங்கில் ஒரு விவாதமாக நிகழ்ச்சி அமைந்தது. விவாத முடிவில் நடுவர் வெற்றி தோல்விபற்றி தீர்ப்பு வழங்காவிடினும், அரங்கு நிறைந்த மக்களின் கரவொலி மொன்டேலுக்குத் தான் அதிகமாக விழுந்தது. விவாதத்தை அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பார்வையிட்ட அரசியல் விமர்சகர்கள், மனோ தத்துவ நிபுணர்கள் எல்லாரும் விவாதம் மொன்டேலுக்கு வெற்றி என்று திட்டவட்டமாகக் கூறி விட்டனர். அமெரிக்க மக்கள் மத்தியில் விவாத முடிவில் எடுக்கப்பட்ட ஒருகுட்டி 'சர்வ ஜன வாக்கெடுப்பி'ன் படி 56 சத வீதமானோர் மொன்டேலுக்கு வெற்றி என்றும், 35 சதவீதமானோர் றீகனுக்கு வெற்றி என்றும் கருத்துத் தெரிவித்தனர். விவாதத்தில் றீகனை விட அரசியல் தெளிவு தனக்குண்டு என்பதை மொன்டேல் நிரூபித்த போதும், மக்களின் கருத்துக்களை றீகன் மொன்டேலை விட சரியாக தெரிந்து வைத்திருக்கிறார் என்றும் கருத்துத் தெரிவித்தனர்.

ஆனால், விவாதத்தைத் தொடர்ந்து மேலும் பல புதுச் சர்ச்சைகள் எழலாயின. விவாதத்தின் போது புள்ளி விபரங்கள் பலவற்றை 56 வயது நிறைந்த மொன்டேல் சரமாரியாக அள்ளி வீசி றீகனின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு சவால் விட்டபோது சில கணங்கள் றீகன் பதில் சொல்ல முடியாதுஸ்தம்பித்து, மலைப்புற்று நின்றதையும்,பின்னர் பேசத் தொடங்கியபோது நாத்தடுமாறியதையும் மேற்கோள் காட்டி, 73 வயது நிறைந்த றீகனின் புத்திக் கூர்மையும் சிந்தனை வலியும் மழுங்கத் தொடங்கி விட்டன(எமது கிராமியப் பேச்சில் சொல்லப்போனால் 'அறளை பெயரத் தொடங்கி விட்டது') என்ற கருத்து வலுப் பெறத் தொடங்கியது. எந்த 'இளமைக் கோலம்' றீகனுக்கு இதுகாறும் ஒரு வரப்பிரசாதமாக ஒரு அருணாக இருந்ததோ அதில் 'ஓட்டை' விழத் தொடங்கி விட்டது இப்போது இந்த வாதப் பிரதி வாதங்களில் அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் பகிரங்கமாக இறங்கியிருந்தனர்.

றீகனுடைய குடும்ப டாக்டரான டாக்டர் டானியல் றூஜ் காலத்திற்குக் காலம் றீகனின் தேகாரோக்கியத்தைப் பரிசோதித்து, அதைப்பற்றி பகிரங்க மருத்துவ அறிக்கை சமர்ப்பிப்பார். அவரது கடைசி அறிக்கை மே 1984ல் பகிரங்கப்படுத்தப்

(9ம் பக்கம் பார்க்க)

---

# அமெரிக்காவின் சுதந்திர பெண்மணி நூற்றாண்டு நிறைவு விழாவில்

## எலினோ ரூஸ்வெல்ற் மறுவாழ்வு பெறுகிறார்

வருகிற வாரத் தொடக்கத்தில் நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் உப ஜனாதிபதிக்குப் போட்டியிடும் முதலாவது பெண்மணி ஜெரால்டின் பெராரோ பேசுவதையும் அவரைப்பற்றி ஏனையோர் பேசுவதையும் ஒரு புதுமையாகப் படித்துவருகிறோம்.

அசுரவேகத்தில் வளர்ச்சியடைந்த அமெரிக்காவில் ஒரு பெண்மணி அரசியல் தலைமை வகிக்கவில்லையே. உலகம் நான்கு பெரும் பெண்பிரதமர்களைக் கண்டபோதும், அமெரிக்க ஜனாதிபதி ஒருபெண்மணியாகவிருக்கவில்லையென்பது ஒருவித வியப்புக்குரிய விடயம் தான்.

பெண்ணுக்கு வாக்குரிமையும் பெண்களும் ஆண்களும் சரிநிகர் சமானமான உரிமைகள் கொண்டு விளங்கவேண்டுமென்று போராடியதும் அண்மைச்சம்பவமெனலாம். ஜனாதிபதியாக தலைமைப்பதவி வகிக்கின்ற அதிகாரப்பித்து அமெரிக்கப் பெண்மணிகளைப் பீடிக்காதிருந்தது அமெரிக்க வரலாற்றின் ஒரு தனித்துவ அம்சம்.

ஆனால் அமெரிக்க தேசத்தில் முதலாவது பெண்மணி என்று உலகம் கௌரவிக்கும் அமெரிக்க ஜனாதிபதியின் பதவியை அலங்கரித்த பெண்மணிகள் எல்லோரின் வாழ்க்கை வரலாற்றை மக்கள் படிப்பதில்லை.

ஜனாதிபதியின் புகழ் அவருடைய துணைவியாரில் மிகுந்த ஒளியுடன் பிரதிபலிப்பதை வெள்ளைமாளிகை நாளேடுகள் நன்கு விளக்கும்,

நாம் குறிப்பிடும் சுதந்திர பெண்மணியின் பெருமை இவற்றையெல்லாம் கடந்த அதிசய ஆளுமைபெற்ற எலினோர் ரூஸ்வெல்ட் அவர்களையே.

இன்றைய ஜனாதிபதிபோட்டியில் இவரைப்பற்றி அதிகம் பேசப்படாவிட்டாலும் இன்று உப ஜனாதிபதியாகப் போட்டியிடும் பெராரோ ஒரு ஜனநாயக வேட்பாளராகவிருந்த போதும் எலினோரின் பெருமை பதவியைக் கடந்தது.

இம்மாத நடுவில் 'உலகின் முதற்பெண்மணி' என்ற பட்டம் பெற்ற திருமதி எலினோர் ரூஸ்வெல்டின் நூற்றாண்டு நிறைவு விழா தேசிய பார்க்கில் மிக அழகாகவும் அடக்கமாகவும் நடந்திருக்கிறது. தெரிந்தெடுத்த 130 விருந்தினருக்கு இன்றைய ஜனாதிபதியின் பாரியார் திருமதி நான்சி றீகன் மதியபோசனம் அளித்துக் கௌரவிப்பதுடன் தொடங்கிய கொண்டாட்டம் ஒரு வாரம் பல துறைகளில் அவருடைய நூற்றாண்டு வாழ்வு உலகுக்கு எவ்வாறு உதவிற்று என்பதை எடுத்துக்காட்டுகிறது.

ஒரு ஜனாதிபதியின் மனைவி, மூன்று தடவைகள் தொடர்ந்து ஜனாதிபதியாக இரண்டாவது உலகமகாயுத்த காலத்தில் ஜனாதிபதியாகவிருந்து அட்லான்டிக் சாட்டர் என்ற சாசனத்தை வகுத்து புகழ்பூத்த பிராங்ளின்ரூஸ்வெல்டின் மனைவி தனக்கென ஒரு தனித்துவ வாழ்வை வாழ்ந்து உலகின் மதிப்பை பெற்றிருப்பது இன்று எந்த அரசியல் சூறாவளியும் அழிக்க முடியாத சாதனை.

முற்போக்கில் ஆர்வங் கொண்ட எலினோர் இளமையில் தான் ஆசிரியராகக் கடமை புரிந்த காலத்திலேயே சமூகசேவையில் குதித்துவிளங்கினார்.

பெண்ணுரிமை, பெண்களுக்கு சுதந்திரம் போன்ற இயக்கங்களில் சேர்ந்து தமதுபொதுச்சேவையைசிதற விடாது தாமொரு பெண்ணென்றாலும் ஒருபத்தாவுக்கு பதிவிரதை என்ற கோதாவில் அமெரிக்க ஏன் உலக சமுதாயத்துக்கு பெரும் பணி ஆற்றினார்.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அமெரிக்காவின் பொருளாதார சீர்கேட்டை நீக்கி, ஹிட்லருக்கு எதிரான போரில் இங்கிலாந்துடன் சேர்ந்து வெற்றிக்கு வித்திட்டார்.

போர் முடியுமுன் பதவியிலிருக்கும்போதே ஜனாதிபதி இறந்துவிட்டார்.

அன்றுதொட்டு 1962ல் இறக்கும் வரைக்கும் அம்மையாரின் சேவை மிகத் தனித்துவமானதும் அவர் நாட்டங்கொண்ட பல துறைகளிலேயே பாடசாலை ஆசிரியர், பத்திரிகாசிரியர், மனிதாபிமானி, அரசியல்வாதி, ராஜதந்திரி, பிரபல பெண்மணியென்பதும் தாய்க்குலத்தின் தலைவியென்பதும் இன்றும் நிலைத்திருக்கிறது.

'மக்காதீசம்' என்றஅரசியல் நோய் அமெரிக்காவின் பெருமையைமங்கச்செய்துகொண்டிருந்தகாலத்தில் அதனைத் துணிவுடன் எதிர்த்தார்.

மரியான் அன்டர்சன் என்ற பிரபல கறுப்பு பாடகருக்குத் தடை விதித்தபோது அதனைக் கடுமையாக எதிர்த்து அக்கூட்டத்தினரின நடவடிக்கைகள் அனைத்தையும் துணிவுடன் பகிஷ்கரித்தார்.

பிந்திய காலத்தில் இன்றையஉலகத்துக்கு விடிவளிக்குமென்று கருதப்படும் மனித அடிப்படை உரிமை சாசனத்தை எலினோர் அவரே முன்னின்று ஐ நாவில் ஒப்பேற்ற

(9ம் பக்கம் பார்க்க)

---

## மக்கள் கருத்து

### தமிழ் மூதாட்டியல்ல

தங்களுடைய நேற்றைய (25-10-84) ஆசிரிய கருத்துப் பகுதியாகிய 'நமது நோக்கு'ல் 'குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்து ஒரூர் நண்ணினும் நண்ணுவர், என்னும் குறட்பாவைத் தமிழ்மூதாட்டியின் திருவாக்கு என எழுதியிருந்தீர்கள்

இச் செய்யுள் பல் சுவை நிறைந்த சிறந்த நூலாகிய நைடதத்தை இயற்றிய அதிவீரராமபாண்டியனால் இயற்றப்பெற்ற வெற்றி வேற்கை என்னும் நறுந்தொகை நூலில் உள்ளது.

மூ. வைத்தியலிங்கம்
உரும்பிராய்.

நன்றி: ஆ-ர்

# "இன்றைய எமது துன்பங்கள் நாளை நமக்கு பசளையாகும்!"

## 'மல்லிகை' விழாவில் கருத்து

(புலோலி)

"கடந்த பல ஆண்டுகளாக நான் மல்லிகையின் ஒழுங்கான வாசகன். நல்ல இலக்கியத்தையும், நச்சு இலக்கியத்தையும் எனக்கு வேறுபடுத்திக்காட்டியது மல்லிகைதான். ஈழத்து எழுத்தாளர்களுடன் பல தரமான தமிழ்நாட்டு எழுத்தாளர்களையும் வேற்றுமொழி இலக்கியங்களையும் அவ்வப்போது அறிமுகப்படுத்தியதும் மல்லிகை இன்று எமது மக்கள் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையற்றநிலையில் வாழ்ந்துகொண்டிருப்பதினல் இலக்கியகாரர்களும் விரக்தியடைந்துள்ளார்கள். இதனுல் எதிர்காலத்தில் தமிழ் இலக்கியத்தின் நிலை என்ன ஆகிவிடுமோ என்று அஞ்சுகிறேன்".

இவ்வாறு தீபாவளியன்று பருத்தித்துறை லயன்ஸ்கழகத் தலைவர் டாக்டர் எம். கே. முருகானந்தம் மேற்படி கழகத்தின் ஆதரவில் புலோலி ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் நடைபெற்ற 'மல்லிகை' இருபதாவதுஆண்டு நிறைவையொட்டிய பாராட்டுவைபவத்தில் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக்ஜீவா பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார். திரு. முருகானந்தம் தொடர்ந்து பேசுகையில், "பருத்தித்துறை லயன்ஸ் கழகம் நேர்மையான இலக்கியகாரர்களை என்றைக்கும் கௌரவிக்கும்" என்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி பேசுகையில், வழக்கமாகத் தர்மகாரியங்களில் கவனம்செலுத்தும் லயன்ஸ் கழகம் மல்லிகை பற்றிய கருத்தரங்கை நடாத்துவது மாறிவரும் கலாசாரச் சிந்தனைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். ஜீவா இவ்வளவு காலமும் பட்ட கஷ்டங்கள் பொதுமக்களால் உணரப்படும் இந்நிகழ்ச்சி பற்றி ஜீவா நிச்சயம் பெருமைப்படலாம். 1954ம் ஆண்டு முதல் இன்று வரை மல்லிகையின் போராட்டத்தன்மை மாறுபடவில்லை. மல்லிகையின் முக்கியபணி எதுவெனில் ஈழத்து இலக்கியத்தின் பிரதிநிதியாகத் தொடர்ந்து அது வெளிவந்தமையாகும் என்றார்.

திரு. ஆ. தேவராசன் பேசுகையில், 1950ல் இருந்து ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களின் இலக்கியப் போராட்டங்களுக்கெல்லாம் உறுதுணையாக மல்லிகை இருந்துவந்துள்ளது. முன்னர் இலங்கைத் தேசிய வார ஏடுகளில் இந்திய எழுத்தாளர்களும் இந்தியக் களங்களுமே இடம்பிடித்திருந்தன. ஆனல் இன்று நிலை மாறிவிட்டது. எமக்கென்று தனிக் கலாசாரம்பேணப்பட்டுவருகிறது" என்றார்.

சிறுகதை எழுத்தாளரும் நாவலாசிரியருமான திரு. நெல்லை க. பேரன் பேசுகையில், மல்லிகையில் அவ்வப்போது வெளியாகும் படைப்புக்கள் தரமான எழுத்தாளர்களினல் ஆக்கப்படுகின்றன. இவை வெறும் பொழுதுபோக்கு இலக்கியங்கள் அல்ல' தானே விளம்பரங்களைச் சேகரித்துத் தானே அச்சுக்கோர்த்தும், கோர்த்த அச்சுக்களைச் சைக்கிளில் காவித்திரிந்தும், புத்தகங்களை வீதி வீதியாகச் சுமந்தும் விற்பனை செய்வதுடன் ஆசிரியராகவும் இருக்கும் ஜீவாவின் அன்றட வாழ்க்கையை நேரில் தரிசிப்பவன் நான். இந்த ஒரு இலக்கிய நேர்மைக்காகவேனும் கட்சிபேதமின்றி இவரது சஞ்சிகையை எவரும் ஆதரிக்கலாம்" என்றார்.

எழுத்தாளரும் நாவலாசிரியருமான திரு. தெணியான் பேசுகையில், "திரு. சிவத்தம்பி ஜீவாவுக்கு மட்டுமல்ல இன்றைய எழுத்தாளர்கள் அனைவரையும் பார்த்து இனிமேல் என்ன சொல்லப்போகிறீர்கள் என்று கேட்டார். நான் அவரைப் பார்த்துக் கேட்க விரும்புவது ஒன்றுதான். நீங்கள் எப்படி எமக்கு வழிகாட்டப்போகிறீர்கள்? எழுத்தாளன் சுதந்திரமாக எழுதக்கூடிய களம் மல்லிகை ஒன்றுதான்" என்றார்.

செல்வி சந்திரா தியாகராசா பேசுகையில், "மலரில் மரபுக்கவிதைகள் ஒன்றுகூட இடம்பெறவில்லையே" என்றார்.

ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. கோ. குமாரவேலு, திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. இராசரத்தினம், திருமதி சீதாதேவி சுகிர்தலிங்கம் ஆகியோரும் மல்லிகையையும் திரு. டொமினிச்ஜீவாவையும் பாராட்டிப் பேசினர்.

திரு. டொமினிக்ஜீவா பதிலுரையின் போது, "நாம் இன்று அனுபவிக்கும் துன்பங்கள் அனைத்தும் நாளைய தமிழ்ச் சமூகத்திற்குப் பசளையாகக் கிடைக்கும்.

என் வழி தனி வழியாகும். நான் சர்வதேச நோக்கில் வாழ்க்கையை நோக்குபவன். நாம் நம்பும்வழி என்றே ஒரு நாள் நமக்கு நிட்சயம் வெற்றியைத் தரும் என்று நம்புகிறேன். நீங்களும் நானும் மடிந்துபோகலாம். ஆனல் மல்லிகையின் நூருவது ஆண்டுமலர் நிச்சயம் மலரத்தான் போகிறது" என்றார்.

# அச்சுவேலி அசம்பாவிதம்: 'லயன்ஸ்' கண்டனம்!

(கொழும்புத்துறை)

அச்சுவேலி வீதிக் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து நடைபெற்ற அசம்பாவிதங்களுக்கு அச்சுவேலி லயன்ஸ் கழகப் பொதுக் கூட்டத்தில் வன்மையான கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசம்பாவித சம்பவங்களின் போது [illegible]பதில் நீதிபதியும், அச்சுவேலி லயன்ஸ் கழகத் தலைவருமான திரு. வ. பாலசிங்கத்தின் வீடும், சொத்துக்களும் (லயன்ஸ்கழகச் சொத்துக்களுடன்) எரிக்கப்பட்டமைக்கும், பொதுமக்களின் ஐந்து வீடுகள் எரிக்கப்பட்டமைக்கும் அச்சுவேலித் தபால்நிலையத்தில் பணம், முத்திரைகள் கொள்ளையடிக்கப்பட்டதற்கும் லயன்ஸ்கழகம் கண்டனம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

லயன்ஸ் மாவட்டக் கவர்னர் ஊடாக இதுசம்பந்தமாக அரசாங்கத்திற்கு அறிவித்துப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டுமென்று கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மிகவும் சீர்கேடான நிலையிலிருந்து அச்சுவேலிக் கிராமோதயசபை முன்னுள் தலைவர் திரு கே. இராஜதுரையின் முயற்சியினுல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருந்த வீதி திருத்த வேலைகள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையினுல் இராணுவ பிரிகேடியரின் அனுமதியைப் பெற்று மீண்டும் திருத்த வேலைகளை மேற்கொள்ளும்படி யாழ். நெடுஞ்சாலைகள் திணைக்கள பிரதான பொறியியலாளரையும், நிறைவேற்றுப் பொறியியலாளரையும் கோருவதென்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

சுகாதாரம், விவசாயம், செயற்பாடுகள் ஆகியனவற்றைக் கவனிக்கும் முகமாக வெவ்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டன. இப்பொதுக்கூட்டம் லயன்ஸ்கழகத் தலைவர் திரு. வ. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

# வவனியாவிலும் பிரஜைகள் குழு

(வவனியா)

வவனியாவில் பிரஜைகள் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

வடமாகாணத்தில் இப்பொழுது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னர் ஆகிய இடங்களில் பிரஜைகள் குழு இயங்குகிறது.


லக்ஸ்பிறே நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து இறக்குமதியாகும் பால்மா.




நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து தருவிக்கப்பட்டு. எந்தக் கட்டத்திலும் எவர் கையும் படாமல் உங்களை நாடும் லக்ஸ்பிறே அதி நவீன இயந்திர சாதனங்களின் மூலம் அடைக்கப்படுகின்றது

லக்ஸ்பிறே கலப்பற்றதும், சுத்தமானதும் சுகாதாரமானதும் என்பது நிச்சயம்.

நாட்டின் எல்லாப்பாகங்களிலும் விற்கப்படும் லக்ஸ்பிறே எந்த இடத்திலும் ஒரே தரத்தில் உள்ளது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

இது ஒரு பொதுசன ஸ்தாபனம். இதன் பங்குதாரர்கள் இத்தீவின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏக விநியோகஸ்தர்கள்.

S. V. முருகேசு அன் சன்ஸ் 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சிற்றி மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.



நிர்வாக அதிகாரி லங்கா மில்க்ஃபுட்ஸ் (சீ.டபிள்யூ.ஈ) லிமிட்டெட், வெலிசர.

லக்ஸ்பிறே-நாட்டு மக்களின் ஊட்டம் மிகுந்த பாலுணவு.

ZENITH

### கடற்படையினரால் கைது செய்யப்பட்ட

# கணவனை விடுதலைசெய்யுமாறு மனைவி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அரச இயந்திரப்படகின் நடத்துனரான கே தம்பிராசாவை (45 வயது) விடுதலைசெய்ய உதவுமாறு கோரி அவரது மனைவி மகேஸ்வரி தம்பிராசா யாழ். அரசாங்க அதிபரை அலுவலகத்தில் நேரில் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளார்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''நெடுந்தீவுக்கும்குறிகாட்டுவானுக்குமிடையே பிரயாணச் சேவையிலீடுபடும் இயந்திரப் படகில் இவர் கடமையாற்றுகிறார். கடந்த 11-ம் திகதி காலை இயந்திரப்படகில் வைத்தே கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, பின்னர் இராணுவத்தினரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டார்.

''கடற்படை ரோந்துப் பிரிவினரால் இவர் கைதுசெய்யப்படுவதற்குமுன்னர் 7-ம் திகதி அதே படகில் 'டைனமைட்'டுக்குப் பாவிக்கப்படும் திரியுடன் மூன்று இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணைசெய்யப்பட்டுவருகின்றனர்.

''கைது செய்யப்பட்டவருக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். கணவன் கைதுசெய்யப்பட்டதால் வாழ்க்கையில் பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளதென்று அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரை ஏற்றுக்கொண்ட யாழ். அரச அதியர், குருநகர் இராணுவமுகாம் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் பத்மஸ்ரீ உடுகமவுடன் தொடர்பு கொண்டு கைதுசெய்யப்பட்ட படகு நடத்துநரை அவர் மனைவி பார்வையிட ஏற்பாடு செய்துள்ளார். (மா)

## வேம்பிராயில் தொழு நோய் ஆய்வு

(மானிப்பாய்)

கோப்பாய் கல்வி மூலவள நிலையத்தில் உணவுப் போசாக்குப் பயிற்சிபெற்ற, புத்தூர், சிறுப்பிட்டி, ஆவரங்கால் கிராமங்களைச் சேர்ந்த யுவதிகள் பாராட்டுக்குரியவர்கள் இவர்கள் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. விஜயரத்தினம் தலைமையில் வேம்பிராயில் தொழுநோய் ஆய்வுகளை நடாத்தினர். இந்த ஆய்வுக் குழுவின் ஆலோசகராக தோல் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். யோகநாதன் கடமையாற்றினார். தொழுநோய்ப் பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். குணரத்தினம், ''சுரூே'' ஸ்தாபனத்தைச் சேர்ந்த இளைப்பாறிய மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர் திரு. ரி. விஜயசுந்தரம், புத்தூர் பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. கே. பேரின்பநாயகம், புத்தூர் கிழக்கு, புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டிப் பகுதிகளுக்கான மருத்துவ மாதுக்கள் ஆகியோர் இவ்வாய்வுக்குழுவில் அங்கம் வகித்தனர்.

## இன்றைய பலன்

மாதம்—ஐப்பசி
திகதி—14 (1984- 10- 30)
வாரம்—செய்வாய்க்கிழமை
திதி— சஷ்டி முற்பகல் 10–37ன் மேல் ஸப்தமி
நட்சத்திரம்— பூராடம் பிற்பகல் 1-32ன்மேல் உத்தராடம்

மேடம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும், இனசனம் கூடுவர், புத்திர சுகத்துடன் தொழில் துறையில் வெற்றியும் கிடைக்கும்.

இடபம்: வயிற்றுகோளாறு தோன்றக்கூடும், உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும், வேவுகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர்.

மிதுனம்: களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர், காதலர்கள் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் நடைபெறும்.

கடகம்: சிரித்துப்பேசியவர்கள் இன்று சீறிவிழுவார்கள், உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும்,

சிங்கம்: பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு, புண்ணிய காரியங்களில் மனம்நாடும், நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்.

கன்னி: வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள், தொழில் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும், எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும்.

துலாம்: வசதிகள் பெருகும்' வரவிலும் திருப்தி ஏற்படும்' செல்வாக்குப் படைத்தவர்களின்ஆதரவு கிடைக்கும், ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விடயம் நல்ல முடிவைத்தரும்.

விருச்சிகம்: எதிர்பாராத வகையில் பொருள்விரயமாகும், வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றிமறையும், சிந்தனையில் குழப்பநிலை ஏற்படும்.

தனுசு: எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும், எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம், உடல்நலம் பாதிக்கப்படலாம்.

மகரம்: எண்ணம்போல் வாழ்வு மலரும், சமூகத்தில் மதிப்பு உயரும்' நண்பர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள், சாந்தகுணம் சிறப்பைத் தேடித்தரும்.

கும்பம்: எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக்கூடும், சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு, இனபந்துக்களின் தொல்லைகள் அதிகரிப்பதற்கு இடமுண்டு.

மீனம்: மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு, மனம் போல்யாவும் நடக்கும், இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ஓய்வுபெற்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. பி. நடராசா, அரசசேவையில் சுமார் 40 வருடம் கடமையாற்றியபின் இளைப்பாறினார். இவர் ஊர்காவற்றுறை காரியாதிகாரியாகவும், வேலணை உதவி அரசாங்க அதிபராகவும், கடமையாற்றியபின், உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாக பதவி ஏற்றார்.

முல்லைத்தீவு உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எம். பற்குணம், யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியாக நவம்பர் 1-ம் திகதி பதவி ஏற்பார். (க)

## சுகாதார தொண்டர்களுக்கு பயிற்சி

(மாவிட்டபுரம்]

காங்கேசன்துறையில் தெரிவு செய்யப்பட்ட சுகாதார தொண்டர்களுக்கு அடுத்த மாதம் 9ம், 10ம் திகதிகளில் விசேட பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது,

கிராம மட்டத்தில் சுகாதாரத்தை மக்களிடையே பரப்பும் நோக்குடன் அமைக்கப்பட்டுள்ள சுகாதாரக் குழுக்கள் மூலம் சேர்க்கப்பட்டுள்ள சுகாதாரத் தொண்டர்களுக்கே இப்பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

### ''எதிர்காலச் சந்ததி வளர

# குழந்தை இலக்கியம் வளர வேண்டும்''

(மானிப்பாய்)

''எதிர்காலச் சந்ததி செழிப்போடும், வலுவோடும் வாழ வேண்டுமாயின், குழந்தை இலக்கியம் ஆரோக்கியமானதாக அமையவேண்டும்'' என கோப்பாய் கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் கூறினார்.

மகளிர் பணியகம் யாழ். திட்டமிடல் பணிமனையோடு இணைந்து, வலி. கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், கோப்பாய் கல்வி மூலவள நிலைய விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் மகளிர் பயிற்சி நெறியில் ''குழந்தை இலக்கியம்'' என்னும் தலைப்பில் திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் விரிவுரையாற்றும்போது, ''குழந்தை இலக்கியம் படைத்தல் மிக இலகுவான காரியம் எனப் பலர் நினைக்கிறார்கள். அது தவறான நோக்காகும். குழந்தை இலக்கிய கர்த்தாக்கள் குழந்தையோடு குழந்தையாக தம்மை நினைத்து சிருஷ்டிகளை உருவாக்கினால் பாராட்டைப் பெறக்கூடியதாக இருக்கும். குழந்தைப் பாடல்களை யாத்த கவிஞரின் வெற்றி எத்தனை குழந்தைகள் அப்பாடல்களை ரசித்து, சுவைத்துப் பாடுகிறார்கள் என்பதில்தான் தங்கியிருக்கிறது. பாரதியாராலேயே வித்திடப்பட்ட குழந்தை இலக்கியம் கா. நமசிவாய முதலியார், மணி திருநாவுக்கரசு, மயிலை சிவமுத்து, கவிமணி தேசியவிநயகம்பிள்ளை, பாரதிதாசன் என்போரால் வளர்க்கப்பட்டு அழ. வள்ளியப்பா, நாக. முத்தையா, தணிகை உலகநாதன் போன்ற பல கவிஞர்களால் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது. இலங்கையிலே நவாலியூர் சோமசுந்தரப் புலவர், முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி, வித்துவான் க வேந்தனார், கவிஞர் மு. செல்லையா, யாழ்ப்பாணன், கவிஞர்கள் இ. நாகராஜன், அம்பி, பா. சத்தியசீலன், துரைசிங்கம், கல்வயல் வே. குமாரசாமி ஆகியோர் தரமான குழந்தைக் கவிதைகளை ஆக்கி நூலாக வெளியிட்டுள்ளார்கள்'' எனக் கூறினார்.

இப்பயிற்சி நெறியின் இணைப்பாளராக, வலி. கிழக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கே. குணரத்தினம் கடமையாற்றுகின்றார்.

### எம். ஜி. ஆர் நலம்வேண்டி

## எம். ஜி. ஆர் மன்றத்தினர் உண்ணாவிரதம்

(மாவிட்டபுரம்)

தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் உடல்நலம் பெறவேண்டும் என்று கோரி மாவிட்டபுரம் கலட்டி எம். ஜி. ஆர். மன்றத்தினர் உண்ணாவிரதம் இருந்துவந்தனர்.

மன்ற உறுப்பினர்கள் 25 பேர் இவ்வுண்ணாவிரதத்தை கலட்டி அம்மன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை மேற்கொண்டனர்.

### ஜப்பான் உதவியுடன்

## மன்னார், முல்லைத்தீவில் மீனவர்களுக்கு வீடுகள்!

(யாழ்ப்பாணம்)

ஜப்பான் உதவியுடன், மன்னாரில்கடற்றொழிலாளர்களுக்கு 1000 வீடுகளும், முல்லைத்தீவில் கடற்றொழிலாளர்களுக்கு 1000 வீடுகளும் கட்டப்படவிருக்கின்றன.

இவ்வீடுகள் ஒவ்வொன்றும் 120 அடிகளைக் கொண்டதாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், நாயாறு, கொக்குத் தொடுவாய், சேமமடு ஆகிய பகுதிகளில் இவ்வீடுகள் அமையும் எனக்கூறப்படுகிறது.

இந்த வீட்டுத்திட்டம் தொடர்பாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் கடற்றொழிலாளர் பகுதி செயலாளர் திரு. அனுரா வீரரத்னவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில், இந்த வீடுகளை முல்லைத்தீவில் பரவலாக அமைக்கும்படி கோரியுள்ளார்.

சாதாரணமாக கடற்றொழிலாளர் குடும்பங்கள் பெரிது என்றும், தற்போதுள்ள 120 சதுர அடி விஸ்தீரணம் போதாதென்றும், 300 சதுரஅடி விஸ்தீரணத்தில் பெரிதாக கட்டுமாறும் அவர் மேலும் கோரியுள்ளார். (க)

# வவனியா உழுந்து வெளிநாடு செல்கிறது

[வவனியா]

வவனியா உழுந்து ஏற்றுமதி சபையினர் இவ்வருடம் இங்கு விளைவிக்கப்படும் உழுந்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத்திட்டமிட்டுள்ளனர்.

வெளிநாடுகளிலுள்ள வர்த்தக நிறுவனங்களுடன் ஏற்றுமதிச் சபையினர் தொடர்பு கொண்டுள்ளனர் என்று சபையின் நிர்வாகப் பணிப்பாளர் திரு. நடராசா தெரிவித்தார்.

வவனியா மாவட்டத்தில் தற்போது விதை உழுந்தை இச்சபை கிலோ 16-50 சதத்திற்கு விற்பனை செய்து வருகின்றது. தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை உழுந்தே இதுவாகும்.

## இளம்பெண் மர்மமரணம்: சந்தேகநபர் மீதுவலைவீச்சு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ்வட்டாரத்தில் உள்ள முரசுமோட்டைக் கிராமத்தில் தலையில் கத்திவெட்டுக் காயங்களுடன் மர்மமானமுறையில் மரணமான இளம் யுவதி சுந்தரம் நிதியின் மரணம் கொலை என்று மரணவிசாரணை மேற்கொண்ட பதில்நீதவான் வி. சுந்தரலிங்கம் தீர்ப்பு வழங்கினார்.

தாயாருடன் வசித்துவந்த பிரஸ்தாப யுவதி சம்பவதினம் தனிமையில் இருக்கும் போது மரணமாகியது 'ஈழநாடு' மூலம் தெரிந்ததே,

கொலைஞர்கள் யுவதியை கொலைசெய்துவிட்டு அவர் அணிந்திருந்த தோடு மோதிரம் ஆகியவற்றையும், 500 ரூபாவையும் அபகரித்துள்ளதாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கழுத்தில் திருகப்பட்டதால் மரணம் சம்பவித்துள்ளதாக சட்டவைத்திய அதிகாரி பி. நவரெத்தினராசா, தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

இம் மரணம்தொடர்பாக பலர் விசாரணையில் உள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

உதவிப் பொலிஸ் சுப்பிரீண்டன் இராஜ வீரக்கோன், இன்ஸ்பெக்டர் வி. எ. சுகதாச, சார்ஜண்டுகள் இ. பாலசிங்கம், எஸ். பூலோகராசா, கான்ஸ்டபிள்கள் கோபாலகிருஷ்ணன், சிவராசா ஆகியோர் அடங்கிய பொலிஸ் கோஷ்டியினர் புலன்விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர்.

## அதிபர் இடமாற்றம்

(உடுவில்)

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய அதிபர் திரு. ஐ. மனோகரன் மயிலணி மகாவித்தியாலயத்திற்கும், உடுவில் அ. மி. சு. க. பாடசாலை அதிபர் திரு. சு. நடராசா உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டு பதவி ஏற்றுள்ளனர்.

## உடுவில் மான்ஸ் சாதனை

(உடுவில்)

மானிப்பாய் கல்வி வட்டார ஆங்கில தினப் போட்டியில் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம் பத்து இடங்களை முதலாம் இரண்டாம் இடமாக பெற்று புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

தனிப்பாடல், குழு அபிநயப்பாடல், குழுப்பாடல் ஆகியவற்றில் இது சிறப்பு இடங்களைப் பெற்றது.

இப்போட்டியில் பங்கு பற்றிய மானிப்பாய்க் கல்வி வட்டார பாடசாலைகள் மூன்று குழுக்களாகப் பிரித்து நடத்தப்பட்டன. முதல் குழுவில் உடுவில் மகளிர் கல்லூரி 27 இடங்களையும். இராமநாதன் கல்லூரி 14 இடங்களையும் பெற்றுக்கொண்டன. நாடகப்போட்டியில் மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ. க. த. க. பாடசாலை அதிக இடங்களைப் பெற்றுள்ளது,

# பாராட்டுப்பெற்ற பஸ்சாரதி, காப்பாளர்

[புலோலி]

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் மினிபஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்த யாழ். மருத்துவபீட மாணவரொருவரின் 3,000 ரூபா பெறுமதியான பொருட்கள் அடங்கிய வெளிநாட்டு சூட்கேஸ் யாழ்ப்பாணத்திலிறங்கிப்பார்த்த போது காணுததினுல் மாணவன் அதிர்ச்சியடைந்தார். ஆனுலும் பொருட்களுடன் சூட்கேஸ்வீட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வல்லிபுரப் பரியாரியார் வீதியில் இருக்கும் கந்தசாமி இராஜாராம் என்ற யாழ். மருத்துவபீட மாணவன் பருத்தித்துறையிலிருந்து மினிபஸ்ஸில் தனது சூட்கேசுடன் யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்தார், மினிவான் வேகமாகச் சென்றபோது வல்லை வெளியில் சூட்கேஸ் வீசப்பட்டது. ஆனுல் வான் சென்றுவிட்டது. யாழ்ப்பாணம் சென்ற மாணவன் சூட்கேசைக் காணுமல் அதிர்ச்சியடைந்து கவலையுடன் சென்றுவிட்டார்.


அதேநேரத்தில் வல்லைவெளியில் வந்துகொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைப் பருத்தித்துறை டிப்போ பஸ் சாரதியின் கண்ணில் இந்த சூட்கேஸ் பட்டது. பஸ்சை நிறுத்திப் பார்த்தபோது சூட்கேசினுள் மாணவரின் பெயர் விலாசம் இருந்ததினுல் பஸ் சாரதி ஸ்ரீஸ்கந்தராசாவும் காப்பாளர் சிவானந்தசாமியும் சூட்கேசை உரியவரின் வீட்டில் ஒப்படைத்தனர். மாணவன் இராஜாராம் பஸ்சாரதியையும் காப்பாளரையும் பாராட்டியுள்ளார்.

## சிரேஷ்ட அதிகாரி நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ். அபிவிருத்திச் சபையின் காரைநகர் வடக்கு உப-அலுவலக பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கும், உப அலுவலக நிர்வாக நடவடிக்கைகளை மேற்பார்வைசெய்வதற்குமாக ஒரு சிரேஷ்ட அதிகாரியை யாழ். மாவட்டச் செயலாளர் திரு. மு. பஞ்சலிங்கம் நியமித்துள்ளார். இவ்வதிகாரி பிரதி செவ்வாய்க்கிழமையும் குறித்த உப அலுவலகத்தில் கடமையாற்றுவார்.

## நியமனம்



யாழ்ப்பாணம் கச்சேரியில் காரியாலய உதவியாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. எம். கே. இளையப்பு கோப்பாய் திறந்தவெளிச் சிறைச்சாலையின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்களில் ஒருவராக நீதி அமைச்சினுல் நியமனம்செய்யப்பெற்றுள்ளார்.

சமூக சேவையாளராகிய இவர் அரசாங்கபொதுச்சேவை தொழிலாளர் சங்கத்தின் முன்னுள் துணைத் தலைவராகவும், பொருளாளராகவும் கடமையாற்றியவர். கோப்பாயில் பல சமூக ஸ்தாபனங்களில் முக்கிய பதவிகளை வகித்ததுடன் கோப்பாய் சூரியோதய ஐக்கிய நாணய சங்கத் தலைவராகவும், அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் துணைத்தலைவராகவும், கோப்பாய் சூரியோதய சனசமூகநிலையத்தின் செயலாளராகவும், கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் துணைச்செயலாளராகவும், கோப்பாய் தெற்கு பாவனையாளர் பாதுகாப்புச் சங்கத்தின் பொருளாளராகவும் பணியாற்றிவருகிருர்.

(வண்-நிரு)

## காடுகளில் தேடுதல் வேட்டை

(மன்னுர்)

பேசாலைப் பகுதியிலுள்ள காடுகளில் பாதுகாப்புப் படையினர் திடீர்த் தேடுதல் வேட்டைஒன்றை நடத்தினர்.

ஆறுஜீப் வண்டிகளில் வந்த பாதுகாப்புப் படையினரே இத்தேடுதல் வேட்டையை நடத்தினர்.

## இலவச வைத்தியசேவை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் உலகசேவைத்தினத்தை முன்னிட்டு சில்லாலை றேமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலயம், அராலி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இலவச வைத்திய சேவைகளை நடத்தியது. கழகத்தலைவர் டாக்டர் ரி. பகீரதன், டாக்டர் எமில் அத்தனுசியார், டாக்டர் எம். டி. பாக்கியசோதிஆகியோர் மாணவர்களை பரிசோதித்து சத்துமிக்க குளிசைகளையும், பூச்சித்தடை மருந்துகளையும் இலவசமாக வழங்கினுர்கள்.

## அனுபவம் பல விதம்

(வவனியா)

வவனியாவில் பஸ் கடத்தப்பட்டு பிரயாணிகள் மிருகத்தனமாக சுட்டுக் கொலைசெய்யப்பட்ட சம்பவத்தில் இறந்த உறவினர் ஒருவருடைய காப்புறுதிப்பணம் பெறுவதற்காக பொலிஸ் அறிக்கை பெறும் நோக்குடன் வந்த யாழ். வாசி ஒருவருக்கு குறித்த மரண அறிக்கைவழங்குவதில் இழுபறி நடைபெற்றதாக குறை கூறப்பட்டது.

இந்த மரண அறிக்கையைப் பெறுவதற்கு பொலிஸ் நிலையம் சென்றபோது அந்த யாழ். வாசிக்கு பலதரப்பட்ட அனுபவம் ஏற்பட்டதாம்.

## கொக்குவில் மேற்கு பிரஜைகள் குழு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில்மேற்கில் பிரஜைகள் குழுவொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இவ் அங்குரார்ப்பணக்கூட்டம் கொக்குவில்மேற்கு கிராமமுன்னேற்றச் சங்கக் கட்டிடத்தில் கடந்த 21ந் திகதி இடம்பெற்றது.

பின்வருவோர் உறுப்பினர்களாகத் தெரிவானுர்கள்: தலைவர்: க. தருமலிங்கம், செயலாளர்: கி புஷ்பராசா, பொருளாளர்: அ. கந்தையா, உப தலைவர்கள்: திரு. பொ. நவரத்தினம், திரு. த அந்தோனிப்பிள்ளை. உபசெயலாளர்கள், உபபொருளாளர்கள் திரு. வே. தம்பிநாயகம், திரு. சு வரதராஜேஸ்வரமுதலி.

இப்பிரஜைகள்குழு ஆரம்பக் கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் உடல்நலம் வேண்டி இறை அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (கி)

## சங்கங்கள் புனரமைப்பு

(வவனியா)

வவனியா மாவட்டத்திலுள்ள சகல கிராம முன்னேற்றச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் மீளவும் புனரமைத்து பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர்களின் உத்தரவின் பேரில் கிராமசேவையாளர்கள், புனரமைப்பு வேலைகளுக்கு முடுக்கி விடப்பட்டுள்ளனர். புனரமைக்கப்படாத ஸ்தாபனங்கள் செயலற்றவை என்று கணிக்கப்படவுள்ளது.

பதிவு செய்யப்பட்ட செயலற்ற சங்கங்கள் உடன் பொதுச்சபையைக் கூட்டி புதிய நிர்வாக உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## கைதான இளைஞர்கள் விடுதலை

[மன்னுர்]

மன்னுர் பகுதியில் பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் உயிலங்குளத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் விசாரணையின் பின் விடுதலைசெய்யப்பட்டனர்.

இந்த இளைஞர்களின் பெற்றோர்கள் மூதூர் எம். பி.யும், மன்னுர் மாவட்ட அமைச்சருமான ஜனுப் எம். ஈ. எச். மஹ்றூப்பைச் சந்தித்து உரையாடியதையடுத்தே இளைஞர்கள் விடுதலைசெய்யப்பட்டனர்.

மன்னுர் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ள மேலும் 9 இளைஞர்கள் விரைவில் விடுதலைசெய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சேவை உள்ளம் கொண்டவர்



நவில் தொறும் நூல் நயம் போன்ற பண்புடையவராகவும், அன்புடையவராகவும் சேவை மனப்பான்மைமிக்கவராகவும் சமயத்தொண்டுகளில் ஈடுபாடுடையவராகவும் வாழ்ந்து வழிகாட்டி, அண்மையில் இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகு எய்திய திருமதி சொறணலட்சுமி இராமச்சந்திரன் அவர்களின் மறைவு சமூகசேவையாளருக்கு பெரும் இழப்பையும் ஆழ்ந்த துயரையும் ஏற்படுத்தியுள்ளது.

மரணம என்பது; அறிவாளி என்றும் அஞ்ஞானி என்றும் அல்லோர் என்றும் நல்லோர் என்றும் பாகுபாடு காட்டுவதில்லை. திருமதி சொறணலட்சுமி இராமச்சந்திரன் யாழ். நல்லூர் வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் யாழ். இந்துமளிர் கல்லூரி பழையமாணவி என்பது குறிப்பிடத்தக்கது. ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுவோமாக.

—என். எஸ். கே. இலட்சுமணன்.

## பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு சேவாச்சிரமம் நிதியுதவி

[புலோலி]

அண்மையில் திக்கத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து பருத்தித்துறையில் ஏற்பட்ட வன்செயல்களின்போது துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் வாழைப்பழ வியாபாரியின் குடும்பத்திற்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நிதியுதவி வழங்கியுள்ளது.

புலோலி அறுபதுபாகைக் கிணற்றடியைச் சேர்ந்த திரு முத்துக்குமாரசாமி என்பவர் முதலாங் கட்டையடியில் வைத்து வாழைப்பழ வியாபாரம் செய்பவர். இவருக்கு ஆறு பிள்ளைகள் உள்ளனர். இவரே துப்பாக்கிச் சூட்டிற்குள்ளாக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருபவராவர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த வண்டில்காரரான திரு. துரை என்பவரும் பருத்தித்துறையில் நடைபெற்ற வன்செயல்களின்போது துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகினுர். இவரது வண்டில்மாடு துப்பாக்கிச்சூட்டில் இறந்திருந்தது. இந்த வண்டில்காரரின் குடும்பத்திற்கும் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நிதி உதவி செய்யவுள்ளது.

## "சுகாதாரசேவை விஸ்தரிக்கவேண்டும்"

(மானிப்பாய்)

சுகாதாரகவனிப்புக் குழுக்கள் கிராமமட்டத்தில் இயங்கினுல் மட்டும்போதாது. ஒவ்வொரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில், மத்திய குழுவாகவும், வைத்திய அதிகாரி பிரிவில் பிரதேச மட்டத்திலும், யாழ் மாவட்ட சுகாதார கண்காணிப்பாளர் மட்டத்திலும் சேர்ந்து இயங்கவேண்டுமெனவும் அதற்கேற்ப நாம் ஒன்று சேர்ந்து இயங்கவேண்டும் என்றும் அப்பணியில் சகல நிலையிலுள்ள குழுக்களும் சுகாதாரத் தொண்டர்களும் உழைக்கவேண்டும்'' என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. க தங்கவேலாயுதம் இணுவில் அ. மி. த. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற உடுவில் அபிவிருத்திச் சபை பிரதேச ஆரம்ப சுகாதார கவனிப்புக் குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கருத்துரை வழங்குகையில் கேட்டுக்கொண்டார்.

இக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய இணுவில் அ. மி. க. க. பாடசாலை அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் தமது உரையில் கிராமங்களில் உள்ள சுகாதாரக் குறைபாடுகளை நீக்க மக்களும், மன்றங்களும் சுகாதாரக் குழுக்களுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் எனவும் மக்கள் சுகதேகிகளாக இருந்தால் தான் வருங்காலத்தில் நற்பிரஜைகளை உருவாக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட கிராமங்களில் சேவையாற்றும் பொதுச் சுகாதார சேவையாளராகக் கடமையாற்றும் மருத்துவ மாதுகளும் சமூகமளித்திருந்தனர்.

'மத்திய குழு உறுப்பினர்களாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்: திரு. செ. சோதிப்பெருமாள் [இணுவில்], செயலாளர்: திரு. எம். எஸ். ஸ்ரீதயாளன் [உடுவில்], பொருளாளர்: திரு இரா சந்திரசேகரம் [தாவடி], உறுப்பினர்களாக திருவாளர்கள் தி. நந்தகுமார், த. சண்முகலிங்கம், சி. கந்தையா, செ. தில்லைநாதன், ஆர். சதானந்தன், எஸ். நடராசா, பா. சாமிரத்தினசர்மா, ம. ஸ்ரீகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்,

## விளையாட்டு உபகரணங்கள் விநியோகம்

(வவனியா)

வவனியா மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வைபவரீதியாக அண்மையில் வழங்கப்பட்டன.

பத்தாயிரம் ரூபா பெறுமதியானஉபகரணங்களை வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் வழங்கினுர்.

இவ்வைபவம் தொடர்பான ஏற்பாடுகளை வவனியா மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. கே. ஏகாம்பரம் செய்திருந்தார்

## சபாஷ் கலாவதி!

(புலோலி)

வல்லிபுர ஆழ்வார் தேர்த் திருவிழா பார்க்கச் சென்ற பெண்மணி ஒருவரின் தவறிய 2,500 ரூபா பெறுமதியான தங்கப் பென்டனை தவறிவிட்ட பெண்ணிடம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் கையளித்தனர்.

கரவெட்டியைச் சேர்ந்த திருமதி. தில்லைநாதன், புஸ்பராணி என்பவரே பென்டனை' தவறவிட்டவராவர். தவறிய பென்டனை செல்வி. எஸ். கலாவதி என்பவர் கண்டெடுத்து பாதுகாப்பு நடவடிக்கையிலீடுபட்டிருந்த சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரிடம் ஒப்படைத்தார். சென் ஜோன் அம்புலன்ஸ் படையினர் பென்டனைத் தவறவிட்டவரிடம் ஒப்படைத்தனர்.

## அங்காடி வியாபாரிகள் அதிகரிப்பு

(வவனியா)

வவனியா நகரில் அங்காடி புடவை வியாபாரிகள் அதிகரித்துள்ளனர்.

தென் பகுதியிலிருந்தே இந்த அங்காடி புடவை வியாபாரிகள் இங்கு வந்து வியாபாரம் நடத்துகின்றனர். வவனியா நகரின் பிரதான கடை வீதியிலேயே இந்த வியாபாரம் நடக்கிறது.

## கல்விவட்டாரம் வலையங்களாக பிரிவு

(கோப்பாய்)

கோப்பாய் கல்விவட்டாரம் நான்கு கல்வி வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் கல்விவட்டாரத்தில் உள்ள 53 பாடசாலைகளும் அச்சுவேலிக் கல்விவலயம், புத்தூர்க் கல்விவலயம் கோப்பாய்க்கல்வி வலயம் வசாவிளான் கல்விவலயம் என்று நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலிக் கல்வி வலயத்தில் 10 பாடசாலைகளும் புத்தூர் கல்வி வலயத்தில் 12 பாடசாலைகளும் கோப்பாய்க் கல்விவலயத்தில் 15 பாடசாலைகளும் வசாவிளான் கல்வி வலயத்தில் 16 பாடசாலைகளும் செயற்படவுள்ளது.

வலயப் பகுதிகளில் சகல வசதிகளும் கொண்ட ஒரு பாடசாலையாக மத்திய பாடசாலை இருக்கும்.

## "கோப்பாய் தபாலகத்தை மீண்டும் இயங்கச்செய்யவும்"

### ச. ச. நிலையக்கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

''பல கிராம மக்களின் முக்கியமான தேவைகளை நிறைவேற்றும் முதலாம்தர நிலையமாக விளங்கிக் கொண்டிருக்கும், கோப்பாய் தபால் நிலையம் கடந்த சிலமாத காலமாகச் செயலற்று இருப்பதன் காரணத்தால் மக்கள் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அரசினரின் மாதாந்த உதவிப் பணம் பெற்று அன்றாடம் தமது வாழ்க்கையை நடாத்தும் பல வறிய மக்கள் இப்பணத்தை உரிய காலங்களில் பெறமுடியாதிருப்பதுடன், வேறுதபால் நிலையங்களுக்குச் சென்று பெற்றுக் கொளளவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியிருக்கின்றார்கள். எனவே மக்களின் இவ்வகையான கஷ்டங்களை நீக்கும் வகையில் கோப்பாய் தபால் நிலையத்தை மீண்டும் செயல்பட நடவடிக்கை எடுத்து உதவும்படி தபால் தந்தி அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் கோப்பாய் சூரியோதய சனசமூக நிலைய விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நிலையத் தலைவர் திரு. கு. செல்லையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரதிகளை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைப்பதாக முடிவுசெய்யப்பட்டது.

## பூட்டிய நிலையில் மக்கள் சேவை

(இறுப்பிட்டி)

புங்குடுதீவு தபால் அலுவலகம் கடந்த சில நாட்களாக பூட்டிய நிலையில் மக்களுக்கு சேவையாற்றுகிறது.

இத்தபால் நிலையத்தில் பணத்தட்டுப்பாடு, தொலைபேசித் துண்டிப்பு போன்ற குறைபாடுகளுடன் தற்போது முத்திரைக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## முதல்வருட ஆசிரியர்களுக்கு கற்பித்தல் பயிற்சிவகுப்புகள்!

(யாழ்ப்பாணம்)

முதலாம் வருட மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்பித்தற் பயிற்சி வகுப்பு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் க!..நத மூன்று நாட்களாக நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியில் திருமதி வி. முருகையா, திருமதி ஏ. யோகநாதன், திரு. எஸ். நாகராசா, திரு. ஆர். சிவானந்தன், திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோர் விரிவுரையாளர்களாகக் கடமையாற்றினர்.


வட்டாரக் கல்வியதிகாரி ஆர். சிவானந்தனும், வட்டாரக் கல்வியதிகாரி (சங்கீதம்) எஸ். கணபதிப்பிள்ளையும் 1-ம் வருடமாணவர்களுக்கு நடிப்பு-சங்கீதம் என்பனவற்றைக் கற்பிக்கும் முறைகளைப் போதித்தனர். திருமதி முருகையா கைவினைத்திறன், வரைதல் பற்றி விளக்கினார்.

## சிரமதானம்

(கொழும்புத்துறை)

அச்சுவேலி புனித சூசையப்பர் கோவிலைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் புனரமைக்கப் படாதிருந்த கிறிஸ்தவ சேமக் காலையைச் சிரமதானம் மூலம் துப்பரவு செய்து செப்பனிட்டனர்.

அச்சுவேலிப் பங்குக்குரவர் வண. பிதா. எம். ரி. பற்றிக் இச்சிரமதான இயக்கத்தை ஆரம்பித்துவைத்தார்.



தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையம்:

# டாக்டர் அனுப்புமாறு தூதரகங்களுக்கு கோரிக்கை

[மாவிட்டபுரம்]

பல லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு டாக்டர்கள் வழங்க அரசாங்கம் முன்வராததால் வெளிநாட்டு தூதரங்களிடம் கோரிக்கை விடுக்க தெல்லிப்பழை ஆஸ்பத்திரிகமிட்டி முடிவு செய்துள்ளது.

மேற்படி கமிட்டியின்விசேட கூட்டம் கமிட்டியின் தலைவர் திரு சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது மேற்படி சிகிச்சை நிலையம் பல லட்சம் ரூபா செலவிட்டு அமைக்கப் பட்டும் டாக்டர்கள் இல்லாத தால் இயங்க முடியாது இருப்பதுபற்றி விரிவாக ஆராய்ந்தது

நிலையத்துக்கு டாக்டரை அனுப்பிவைக்கும்படி அரசாங்கத்துக்கு பலமுறை கோரிக்கை விடுத்தும் அதனல் பயன் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கு டாக்டர் வேண்டும் என்று கோரிக்கை விடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

தற்சமயம் உள்ள சூழ் நிலையில் கொழும்புக்கு சென்று இப்பகுதி நோயாளர் சிகிச்சை பெற முடியாதுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கோக்கா கோலாவா?...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டபோது ஒரு சிறிய கட்டி (புற்றுக் கட்டி அல்ல) பெருங் குடலில் இருப்பதைத் தவிர றீகனின் உடல்நலம் சிறப்பாக இருந்தது தெரிந்தது.

ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தின் மூப்பு மருத்துவ பேராசிரியர் லோறன்ஸ் கிளெய்ன் ஜனதிபதி றீகன் ''இளம் கிழவன்'' கட்டத்திலிருந்து ''முதிய கிழவன்'' நிலைக்கு மாறத் தொடங்கியுள்ளார் என்று அறிவித்துள்ளார். மேலும் மூப்பு மருத்துவ நிபுணர்கள் ஜனதிபதி றீகனுக்கு உளக்கூர்மைச் சோதனைகள் செய்து பார்த்தால் அவருக்கு ''அறளை'' பெயரத் தொடங்கிவிட்டதா என்று நிச்சயமாகக் கூறலாம் என்கிறார்கள்.

இதற்கு றீகன் சம்மதிப்பாரா?

### மேக்கப் மொண்டேல்

இந்த வயதுப் பிரச்னை பற்றி றீகனிடம் கேட்டபோது, ''மொண்டேல் ஹெவி மேக்கப்'' போட்டுக்கொண்டு டிவி விவாதத்திற்கு வந்தார். அதனுல் தான் அவரது வயது வெளிப்படவில்லை. நானும் அப்படி வரவா'' என்று பதிலழித்துள்ளார்.

நான் ஹெவி மேக்கப்'' புடன் வரவில்லை. ஹெவியான கொள்கைகளுடனும்' ஹெவியான வாதங்களுடனும் வந்தேன் என்று மொண்டேல் பதிலடி கொடுத்துள்ளார்.

இதற்கிடையில் றீகனின் ஜனதிபதி தேர்தல் பிரசாரக் குழுவினர் றீகன் திடகாத்திரமாக உள்ளார் என்றும், விறகு வெட்டுதல், பாரம்தூக்குதல், குதிரைஓட்டம் போன்ற உடற்பயிற்சிகள் செய்து வருகிறார் என்றும் கூறி, அவற்றின் புகைப்படங்களையும் வெளிபிட்டுள்ளன. தன்னேடு கர மல்யுத்தம் செய்ய வருமாறு றீகன் மொன்டேலுக்கு சவால் விட்டுள்ளார். தசைகளின் பலத்தால் றீகனின் கரத்தை வளைக்கத் தேவையில்லை. திடமான கொள்கைகள் -காத்திரமான வேலைத் திட்டம் என்பவற்றின் அடிப்படையில் றீகனின் கரத்தை வளைத்தேன், வளைப்பேன் என மொன்டேல் பதிலடி கொடுத்துள்ளார்.

### வயது பிரச்னை

லண்டனிலிருந்து வெளிவரும் பிரபல தினசரியான ''கார்டியன்'' றீகனது வயது பற்றி ஆசிரியத்தலையங்கத்தில் அச்சம் தெரிவித்துள்ளது. றீகன் முதலாவது முறை ஜனதிபதிப் பதவிக்கு வந்த போது அமெரிக்க வரலாற்றின் அதி முதிய ஜனதிபதி என்ற சாதனையை ஏற்படுத்தியவர். இம் முறை மீண்டும் தெரிவானுல் அவரது ஜனதிபதிக் காலம் முடிவடையும் காலத்தில் அவருக்கு வயது 78 வயதாகவிடும். ஒரு சோவியத் தலைவர் அதிக வயது நிறைந்தவராக இருப்பது போன்றதல்ல அமெரிக்க ஜனதிபதிப் பதவி சோவியத்தில் முக்கிய முடிவுகளை ஒரு கூட்டுத் தலைமை (அரசியல் குழு) மேற்கொள்கிறது. அமெரிக்க ஜனதிபதியின்பொறுப்பு அதிகமானது, ஒரு அணு ஆயுதப் போரையே ஆரம்பிக்கும் ''சுவிட்ச்'' ஜனதிபதியிடமே இரவு பகலாக இருக்கிறது. ஒரு சிறு தவறுக்கும் இடமில்லை' றீகனை விரும்பியவர்கள் அவரது ஆட்சியின் உச்சக் கட்டத்தை ஏற்கனவே பார்த்துவிட்டார்கள் றீகன் மீண்டும் பதவிக்கு வந்தால் ஏறிவரும் அவரது வயதின் விளைவாக அவரது ஆட்சித் திறன் நாளுக்கு நாள் சரிந்து கொண்டுதான் போகும் என்பதை அமெரிக்க வாக்காளர்கள் மறந்துவிடக் கூடாது. என்று எச்சரித்துள்ளது.

## மயான மதில் இடிந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை துண்டி மயானத்தின் இருபக்க சுவர்கள் இடிந்து விழுந்துள்ளது. மயானகண்காணிப்பாளர், இச் சுவரை மீண்டும் கட்டுவதற்கு இம் மயானத்தை பாவிக்கும் அப் பகுதி மக்களுடன் தொடர்புகொண்டிருப்பதாக கூறப் படுகிறது.

இம் மதில் முன்னுள் யாழ். எம். பி. வி. யோகேஸ்வரன் முயற்சியால் இரு வருடத்திற்கு முன் கட்டப்பட்டது.

## சைவசமய போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்]

கீரிமலை சிவநெறிக் கழகம் யாழ்ப்பாணம் ஷப்ரு யூனிக்கோ பிஞன்ஸ் நிறுவனத்தின் ஆதரவில் நடாத்திய சைவசமயப் போட்டியில் சுழல் கேடயப் பரிசுபெற்ருேர் விபரம் வருமாறு:

சைவசமய அறிவு விநாடி விஞப் போட்டி- கீழ்ப்பிரிவு 1-ம் இடம்: கொக்குவில் இந்து பிரதம பாடசாலை, 2- ம் இடம் தெல்லிப்பளை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி மேற்பிரிவு;- 1-ம் இடம்:தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி 2-ம் இடம்: வேலணை சேர் வைத்திலிங்கம் து. ம. ம வி.

தொண்டு படும் செயல் முறைப் போட்டி: கீழ்ப்பிரிவு; 1-ம் இடம்; கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம், 2- ம் இடம்: தெல்லிப்பளை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி, மேற்பிரிவு: ஆண் 1-ம் இடம்: கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம், பெண்: - 1-ம் இடம்: தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி

## லொறி - பஸ் மோதல் 8 பேர் பலி

[சென்னை]

திருச்சியில் நேற்று ஏற்பட்ட லொறி-பஸ் மோதலில் 8 பேர் பலியாகினர். 30 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் திருச்சிமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை திருச்சியில் மின்சாரம் பாய்ச்சப்பட்ட கம்பியொன்றில் மிதித்ததினுல் ஒரு குழந்தை உட்பட 4 பேர் பலியாகினர்.

[அகமதாபாத்]

குஜராத்தில் ஏற்பட்ட வீதி விபத்தொன்றில் 8 பேர் பலியாகியுள்ளனர்.

[புதுடில்லி]

டெல்லியில் மாடிக்கட்டிடம் இடிந்து வீழ்ந்ததினுல் 4 பேர் பலியாகியுள்ளனர்.

திருநெல்வேலி

## சைவ அனுதை சிறுர்களுக்கு உணவு, துணி வழங்கினர்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி சைவ அனுதைகள் விடுதி சிறுவர்களுக்கு திருவாளர்கள் வி. ரி. பாலசிங்கம், பி. இராமநாதன், வ. மாணிக்கலிங்கம், ஆகியோர் மதியபோசனமும், திரு எஸ். துரைராசா இரவுபோசனமும் திரு. பாலசிங்கம் காலை உணவும் வழங்கினர்.

திருவாளர் குணரத்தினம்' ஜெயராசசிங்கம், கு. மகேஸ்வரன், ஆகியோர் இச் சிறுவர்களுக்கு சிற்றுண்டி வழங்கினர்.

திருமதி. சிவசுப்பிரமணியமும், சகோதரியும், திரு அ. கந்தசாமியும் இச் சிறுவர்களுக்கு தீபாவளித் திருநாளுக்காக துணிகளை வழங்கினுர்கள்.

## அமெரிக்காவின்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் முதற் பிரதிநிதிகளில் முதன்மை பெற்று அரும் புகழ் பெற்ருர்.

பெண்குலத்துக்குமட்டுமல்ல மனித வர்க்கத்துக்குமே அடக்கம், அமைதி, பணிவு, துணிவு கொண்ட மலர்களால் கட்டப்பட்ட நறுமணம் வீச வாடா மாலை எலினேர் ருஸ்வெல்ட்.

எம். ஜி. ஆர். சுகமடையக்கோரி

## கிளிநொச்சி மாவட்டத்தில் விசேட வழிபாடுகள்

(கிளிநொச்சி)

தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆரின் உடல்நலன் சுகமடைய வேண்டி கிளிநொச்சி மாவட்டம் பூராகவும் பிரார்த்தனைகளும்பூஜைவழிபாடுகளும் நடைபெற்று வருகிறது.

கிளிநொச்சி உதயநகரில் உள்ள நாகதம்பிரான் ஆலயத்தில் கிளிநொச்சி பத்திரிகையாளர்வாசகர்நலன்புரிச்சங்கம் உதயநகர் கிராம முன்னேற்றச் சங்கம் உதயநகர் உதயகலா மன்றம் ஆகியவற்றின் ஆதரவுடன் அபிஷேக ஆராதனைகளும், அமைதிப் பிரார்த்தனையும், விசேட சொற்பொழிவும் இடம் பெற்றது

கிளிநொச்சி கிருஷ்ணன் ஆலயத்தில் திருநகர் மக்களால் அபிஷேக வைபவம் இடம் பெற்றது.

திருநகர் கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் மௌன ஊர்வலமும் வழிபாடுகளும் நடத்தப்பட்டது.

கிளிநொச்சி நகர அருள்மிகு முருகன் ஆலயத்தில் கணேசபுரம் கிராம முன்னேற்றச்சங்கத்தால் அபிஷேக ஆராதனையும் கூட்டுப் பிரார்த்தனையும் நடத்தப்பட்டது.

கிளிநொச்சி இந்து இளைஞர் கலாச்சார பேரவை, உதயநகர் இந்து இளைஞர் மன்றம், உருத்திரபுரம் காந்தி சேவா சங்கம், உருத்திரபுரம் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கம், வடபிரதேச சித்த ஆயுர்வேத வைத்திய சங்கம் கிளிநெசச்சி ஆகியனவும் தமிழக முதல்வர் சுகம் பெற விசேட பிரார்த்தனையில் ஈடுபட்டன.

பூநகரியிலும், பளையிலும் உள்ள ஆலயங்களிலும் விசேட பூசைகள் நடத்தப்பட்டன. கிளிநொச்சி நகர பள்ளிவாசல், சென் திரேசா ஆலயம், கருணை நிலைய ஆலயம், பரந்தன் ஜெப ஆலயம், கிருஷ்ணபுரம் ஜெப ஆலயம் ஆகியவற்றிலும் விசேட பூஜைகள் நடைபெற்றன.

உலக இந்து மகாசபை கிளிநொச்சி கிளை, பரந்தன் நவஜீவனம், பரந்தன் வை. எம். சி. ஏ. இயக்கம் ஸ்கந்தபுரம், வட்டக்கச்சி, அக்கராயன் குளம், வன்னேரிக்குளம், இராமநாதபுரம் ஆகிய பகுதி இந்து ஆலயங்களிலும் பூஜைகள் நடைபெற்றன.

## தினேஷ் வேண்டுகோள்

[கொழும்பு]

''சிங்கள மக்களைப் பாதுகாப்பதாக கூக்குரலிடும் அரசு அதேவேளை தொண்டமானுக்கு கொடுத்தவாக் குறுதிகளையும் வெளியிட வேண்டும்''

இவ்வாறு மகரகம எம். பி. திரு. தினேஷ் குணவர்த்தன பாரராளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

உமாமகேஸ்வரன்- தொண்டமான் பேச்சு வார்த்தைகளையும் அரசு அம்பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

## மதுவும் விதியும்!

[யாழ்ப்பாணம்]

மதுவுக்கு அடிமையான ஒருவர் மதுவுடன் நஞ்சுத்திரவத்தையும் சேர்த்து அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே, நடராசா [55 வயது] என்பவரே பலியானவராகும்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி எஸ் எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்திஞர்.

சம்பவதினம் மகனிடம் காசு கேட்டதாகவும் மகன் பேசி விட்டுப்பின் பணம் கொடுத்ததாகவும் அவர் மதுவுடன் நச்சுத்திராவகம் சேர்த்து அருந்தியதகவும் கூறப்பட்டது

விசாரணை முடிவில் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப் பட்டது. [க]

## காப்பாளர் தினம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் காப்பாளர் தினம் நாளை புதன்கிழமை பிற்பகல் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகளையும் வெளி நோயாளர் பகுதியையும் பராமரித்து வரும் காப்பாளர்களை கௌரவிக்கு முகமாக இத் தினம் கொண்டாடப்படுகிறது.

இத் தினத்தில் டாக்டர்கள் செல்வி. ஸ்ரீ. பொன்னுத்துரை, சி. கதிரவேற்பிள்ளை செ. பத்மநாதன் ஆகியோரும், வைத்தியசாலைக் குழுத் தலைவர் திரு. இ. சபாரத்தினமும் உரையாற்றவுள்ளனர். திரு. க. சிவானந்தம் நன்றியுரை நிகழ்த்துவார்.

## ஓய்வு பெற்ருர்

[பண்டத்தரிப்பு]

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நிர்வாக உதவியாளராக கடந்த பல வருடகாலமாக கடமையாற்றிய திரு. வ. சண்முகம் தமது39வருட அரசசேவையின் பின்பு இம்மாதம் தொடக்கம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

## இலக்கியப்பணியில் லயன்ஸ் கழகம்

[புலோலி நிருபர்]

பருத்தித்துறை லயன்ஸ் கழகம் தற்போது இலக்கிய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது. 'மனிதவாழ்க்கைக்கு இலக்கியம் மிக ஒன்றியமையாதது என்பதைக்கருத்திற்கொண்டே பருத்தித்துறை லயன்ஸ் கழகம்இலக்கியதுறையிலும் ஈடுபட்டு வருகின்றது,

இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை லயன்ஸ்கழகத் தலைவர் லயன் டாக்டர் எம். கே. முருகானந்தன் ஏனைய லயன்ஸ் கழக உறுப்பினர்களுடன்இணைந்துமேற்கொண்டு வருகின்ருர்.

## மீண்டும் 'இடியோசை'

[பண்டத்தரிப்பு]

மாதகல் கடற்கரைப்பகுதியில் நேற்று இரவும் பீரங்கி குண்டுச் சத்தங்கள் அடிக்கடி கேட்ட வண்ணம் இருந்தன.

இரவு வேளையில் தினமும் இந்த பீரங்கி வெடிகள் தீர்க்கப்படுவதனுல் இப்பகுதி கரையோர மக்கள் மிகுந்த பீதிக்குள்ளாகி வருகின்றனர்.

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு கலைமகள் சன சமூக நிலையம், காந்திஜி சன சமூக நிலையம் ஆகியன கூட்டாக சிரமதானமொன்றை கடந்த வாரம் மேற்கொண்டன.

வாய்க்கால்களைத் துப்பரவு செய்ததுடன் வறிய மக்களின் வேலிகளையும் சிரமதானத் தொண்டர்கள் சீரமைத்துக் கொடுத்தனர். இவ் விரு சனசமூக நிலைய இளைஞர்களுடன் பெருமளவு பொது மக்களும் இச் சிரமதானப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

# தீயணைக்கும் படை நிதி: ரூ. 5 லட்சம் சேர்ந்தது

[யாழ்ம்பாணம்]

யாழ். மாநகராட்சி மன்றத்தினால் அமைக்கப்படவிருக்கும் தீயணைக்கும்படை நிறுவும் நிதிக்கு இதுவரை 5 லட்சத்து 5 ஆயிரத்து 123 ரூபா 65 சதம் கிடைத்துள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ் மாநகராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ரூ 35,650, திரு என். கந்தையா செட்டியார் [காங்கேசன்துறை வீதி], ரூ. 10,000 தீவுப்பகுதி தனியார் போக்குவரத்துச்சேவைச் சங்கம் [வேலணை] ரூ. 10,000, ரி. குமாரசாமி றெக்ஸ் றைல்ஸ் [யாழ்ப்பாணம்] ரூ. 3,000, ஹாஜி ஈ.ஏ. வஹாப்தீன் அன் பிரதர்ஸ் [ஆஸ்பத்திரி வீதி] ரூ. 1,500, காங்கேசன்துறை சிமெந்து பொதுத் தொழிலாளர்சங்கம்ரூ. 1,000 யாழ் மாநகர சபை ஊழியர் கூட்டுறவுக் கடனுதவிச் சிக்கனச் சங்கம ரூ. 1,500, ஜே. கீ. சோபிதா பத்மநாதன் [லங்கா சேவிஸ் ஸ்ரேசன்] ரூ 200, திரு சி. கதிர்காமர் பிரதி ஆணையாளர் [யாழ்ப்பாணம்] ரூ. 450, நேரடியாக வங்கியில்செலுத்தியது ரூ.4,262.15 சதம்

மேற்குறிப்பிட்ட அன்பளிப்புச் செய்தோர்விபரம் உள்ளிட்டு இத்தொகை வெளியிடப்பட்டுள்ளது. [மா]

## ஹாட்லிக்கு நூல்கள் அன்பளிப்பு

[புலோலி]

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகத்திற்குப் பல நூல்களை பருத்தித்துறை லயன்ஸ் கழகத்திடம் கையளித்துள்ளது.

சேவாச்சிரம மதத்தலைவர் சுவாமி சித்ரூபானந்தா நூல்களை லயன்ஸ் கழகத்தினரிடம் கையளித்தார். மேலும் 1000 ரூபா பெறுமதியான நூல்களைக் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## யாழ். இந்து மாணவர் முதல்வர் தேர்வு

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்துக் கல்லூரி மாணவர் முதல்வர் தேர்தலில் த. அருணகிரிநாதன் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

மொத்தம் 27 இடங்களுக்கான தேர்தலில் 36 மாணவர்கள் போட்டியிட்டனர். வெற்றி பெற்றவர்கள் விபரம் வருமாறு:- த. அருணகிரிநாதன், ம. அபிமன்யு, த.ரவிசங்கர், சி. உதயராஜன், த. கதிர்மாமநாதன், சி.கோபிநாத், ந. கௌரிபாலன். ம சிவகுமாரன், ச. சத்தியசீலன், ம. சரவணபவன், ச. சிவகுமார், ச. சிகந்தன், ச. தவச்செல்வம், ச. தவபாலன் ம. சிவகுமாரன், த தர்மபாலன், செ. தேவராஜா, செ. நக்கீரன், ஆ. பார்த்திபன், நா பிரதீபன், கு பேரானந்தராஜா, சி. மகிந்தன், வ. முருகானந்தன், சி. ரமேஷ், ந. ரமேசு, பொ. வித்தியபாஸ்கரன், க. ஜெகதீசன் க ஸ்ரீகுமார். (மா)

## மீண்டும் படக்காட்சிகள்

[புலோலி]

பருத்தித்துறையில் அண்மையிலேற்பட்ட வன்செயல்களைத் தொடர்ந்து மூடப்பட்டிருந்த ஒரு தியேட்டரில் மீண்டும் படக்காட்சிகள் ஆரம்பமாகியுள்ளன

பருத்தித்துறையில் மற்றுமொருதியேட்டர் வன்செயல்களின்போது தீக்கிரையாக்கப்பட்டமையினால் பாதிக்கப்பட்டுமூடப்பட்டுள்ளது.

## ரயில் நிலைய அதிபர்கள் இடமாற்றம்

(மன்னார்)

தலைமன்னார் துறை ரயில் நிலைய அதிபராகக்கடமையாற்றும் திரு டி.டயஸ் எதிர்வரும் ஜனவரி முதல்மருதானை ரயல் நிலைய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் இவரது இடத்திற்கு காலி ரயில் நிலையஅதிபராக கடமையாற்றும் திரு ஐ டி விதான இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ் ரயில் நிலைய அதிபராகக் கடமையாற்றும் திரு. எம்.கதிர் மாமநாதன் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் கோட்டை ரயில் நிலைய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வரசங்காவேவ ரயில் நிலைய அதிபராகக் கடமையாற்றும் திரு.பி.அன்ரனிப் பிள்ளை கொழும்பு 'குட்செட, ரயில் நிலைய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

இவரது இடத்திற்கு கொழும்பு 'குட்செட்' ரயில் நிலைய அதிபராக கடமையாற்றும் திரு. கே இராஜலிங்கமும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அம்பன் பொல ரயில் நிலைய அதிபராகக் கடமையாற்றும் திரு.ஏ.அழகராஜா கொடிகாமம் ரயில் நிலைய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

செனரத்கம ரயில் நிலைய அதிபராகக் கடமையாற்றும் திரு.கே.நடராசா புத்தளம் ரயில் நிலைய அதிபராக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

## மாணிக்கவாசகர் மடலாய புதிய மண்டபத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கரைநகர் சிவன் கோவில் மாணிக்கவாசகர் மடலாய புதிய மண்டபத் திறப்புவிழாவும், அன்னதான சபையின் 30வது ஆண்டுக்கான பொதுக் கூட்டமும் அடுத்த மாதம் 4ம் திகதி காலை மாணிக்கவாசகர் மடாலயத்தில் சபைத்தலைவர் திரு வி.எம் சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஈழத்துச் சிதம்பர பிரதம சிவாச்சாரியர் சிவஸ்ரீ க.மங்களேஸ்வரக் குருக்கள் புதிய மண்டபத்திற்கான புண்ணியக் கிரியைகளை நிறைவேற்றி வைப்பார்

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

# உடுத்துறைக் கடலிலும் தாக்குதல் நடந்தது

(கொழும்புத்துறை)

உடுத்துறைக் கடலில் இயந்திர வள்ளங்களில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களும் நடுக்கடலில் பலத்த தாக்குதலுக்குள்ளானதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு மீன்பிடிக்கச்சென்ற உடுத்துறையைச் சேர்ந்த நான்கு மீனவர்களே தாக்குதலுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது

இம்மீனவர்களின் இரு இயந்திர வள்ளங்களின் அவுட்போட் இயந்திரங்களும்குண்டுகளால் தகர்க்கப்பட்டதுடன், வள்ளங்கள் இரண்டும் துப்பாக்கிக்குண்டுகளால் துளைக்கப்பட்டனவாம். இருவள்ளங்களிலுமிருந்த நான்கு மீனவர்களும் படுமோசமாகத் தாக்கப்பட்டனராம்.

சிலதினங்களுக்கு முன்பும் செம்பியன்பற்றுக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற இருமாமுனையைச் சேர்ந்த மீனவர்கள் கடுமையான தாக்குதலுக்குள்ளாகியதுடன் அவர்களின் ஆறுகுதிரைச் சக்திகொண்ட அவுட்போட் இயந்திரமும் குண்டுகளால் தகர்க்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கடலில் வைத்து நடைபெறும் இத்தாக்குதல் சம்பவங்களால் செம்பியன்பற்று, உடுத்துறை, ஆழியவளை மீனவர்கள் கடலுக்குச் செல்ல அச்சம் அடைந்துள்ளனர்.

## கச்சேரி ஊழியரின் 'அலவன்ஸ்' குருநகர் வங்கியில்!

[கொழும்புத்துறை]

யாழ் கச்சேரி உத்தியோகத்தர்களின் மேலதிக நேர வேதனம், பிரயாணப்படி ஆகியனவற்றைக் குருநகர் இலங்கை வங்கிக் கிளையில் வைத்து வழங்குவதற்குமுடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ் கச்சேரிச் சிறுப்பர் அலுவலகம் மூடப்பட்டுள்ளதனால் கச்சேரி உத்தியோகத்தர்கள் தமது மேலதிக நேர வேதனம், பிரயாணப் படிகளைப் பெற முடியாது கஷ்டமனுபவித்து வந்தனர்,

இதனைத் தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தற்காலிக ஏற்பாடாகக் குருநகர் இலங்கை வங்கிக்கிளை அலுவலகத்தில் வைத்து கச்சேரி ஊழியர்களின் மேலதிக நேர வேதனம் பிரயாணப்படி ஆகியவற்றை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

# பனங்காய் விழுந்து குழந்தை பலி!

[யாழ்ப்பாணம்]

வழக்கம்போல்வீட்டுமுற்றத்தில் தாயின் மடியிலிருந்து விளையாடிக் கொண்டிருந்த ஒன்றரை வயது குழந்தையின் தலையில், முற்றத்தில் நின்ற பனையிலிருந்த பனங்காய் விழுந்ததால் பலியானது.

கரவெட்டியைச் சேர்ந்த சிவராஜசிங்கம் சுகிதா என்ற குழந்தையே பலியானதாகும். யாழ்.மரணவிசாரணை அதிகாரி எஸ். எஸ் பிரான்சில் மரண விசாரணை நடத்தினுர்.

காயமடைந்த குழந்தை மந்திரிகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானது. விசாரணையின் பின் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [க]

## பேராயர் யாழ். விஜயம்

(அரியாலை)

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு திருமண்டலப் பேராயர் பேரருட் திரு. சுவீதின் பெர்னுண்டோ ஆண்டகை டிசம்பர் மாதம் 1ம் திகதி வடபகுதிக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

வடபகுதிக்கு வரவிருக்கும் பேராயர் யாழ்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் 75வது வருடாந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதுடன் கைதடி, விழிப்புலன், செவிப்புலன் இழந்தோர் பாடசாலையில் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் சிற்றாலயத்தையும் திறந்துவைப்பார். கிளிநொச்சி கருணா நிலையத்தின் புதிய கட்டிடத்திற்கும் அடிக்கல் நாட்டுவார்.

## கண்காட்சி

(கொழும்புத்துறை)

ஏற்றுமதி உற்பத்தி மாதிரிக் கிராமங்களின் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி இம்மாத இறுதியில் பண்டாரநாயக்கா சர்வதேசமகாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புலோலி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஏற்றுமதி உற்பத்திக் கிராமக்கம்பனி ஆகியன இக்கண்காட்சியில் தமது உற்பத்திப் பொருட்களைப் பார்வைக்கு வைபதற்கான நடவடிக்கைகளை மேற கொண்டு வருகின்றன.

## ரூபவாஹினி

மாலை

5-30 மைட்டி மௌஸ்
6-00 சிங்கள கல்வி நிகழ்ச்சி
6-30 நான் உங்கள் தோழன் உள்ளூர்த் தமிழ்த் திரைபடம்
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 விவரணச் சித்திரம் (சிங்களம்]
7-45 கோட் ரெட்
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 கோட் ரெட் தொடர்ச்சி
9-00 டிபரன்ற் ஸ்டிரோக்ஸ்
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
10-00 ஆழ்கடல் ஆராய்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-55 நிகழ்ச்சிகள் முடிவு

## இன்று

[யாழ்ப்பாணம்]

வண்ணை அருள்மிகு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று காலை 7மணிக்குஸ்நபனுபிஷேகமும், விசேஷ பூஜையும் நடைபெறும் மாலை 3-30மணிக்கு சந்தன காப்புச் சாத்தப்பெற்ற செந்தில் குமரனுக்கு நியாச பூர்வ ஷண்முகார்ச்சனையும 4-30 மணிக்கு யாழ அணுமலை இசைத் தமிழ் மன்றத்தினரின் திருப்புகழ் ஆராதனையும் நடைபெறும் தொடர்ந்து திருக்கல்யாணமும் உள் வீதி உலாவும் நடைபெறும்.


## 1984-ம் ஆண்டு பட்ஜெற் வருமுன் முந்துங்கள்

உங்களுக்கு தேவையான கீழ்க்காணும் பொருட்களை தற்பொழுது உள்ள விலைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்:-

★ 'சிசில்' குளிர்சாதன ஒற்றைக்கதவு, இரட்டைக் கதவு பெட்டிகள் டீப் பிறீசர்கள்
விலை: ரூ. 8300/- — ரூ. 17100/-வரை

★ 'யமஹா' மோட்டார் சைக்கிள்கள், ஜெனரேற்றர்கள்
விலை: ரூ 11750/- — ரூ. 18500/-வரை

★ 'பஜாஜ்' ஸ்கூட்டர்கள், ஓட்டோ றிக்சோக்கள்
விலை: ரூ. 21000/- — ரூ. 47500/-வரை

★ 'கனன்' போட்டோ பிரதி இயந்திரங்கள் (மூன்று நிறங்களில் அடிக்கக்கூடியது), கல் நலேற்றர்கள்
விலை: ரூ 220/- — ரூ. 74900/-வரை

★ ஆங்கில, தமிழ் தட்டச்சு இயந்திரங்கள்—ஹல்டா, ஒப்ரிமா, சில்வறிட், ஒலிவெற்றி, ஒலிம்பியா, போனிக்ஸ்
விலை: ரூ. 2700/- — ரூ. 20500/-வரை

★ நீர் இறைக்கும் யந்திரங்கள் (மின்சாரம், மண்ணெண்ணெய், முதலியவற்றில் இயங்கக்கூடியது)
விலை: ரூ. 3050/- — ரூ. 7500/-வரை

★ 'றலி,' ஒறியன்ஸ் துவிச்சக்கர வண்டிகள்
விலை: ரூ 2200/- — ரூ. 4500/-வரை

★ பணப்பெட்டிகள், இரும்பு அலுமாரிகள். கதிரைகள், மேசைகள்
விலை; ரூ 255/- — ரூ. 4500/-வரை

★ சீலிங், ஸ்ராண்ட், மேசை மின் விசிறிகள்-
விலை: ரூ. 1350/- — ரூ. 3250/-வரை

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்ரெற்,
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22134

**ராணி** (யாழ்ப்பாணம்)
சிவாஜியின்
**நிச்சயதாம்பூலம்**
தினசரி 3 காட்சிகள்

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 4-45
Carolyn Judd, Teri Gusman
Angel Colbert
FIVE ANGRY WOMEN
(Strictly For Adults)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10.30, 2. 30, 6.30
முத்துராமன், நாகேஸ்
ராஜ்ஸ்ரீ
**அனுபவம் புதுமை**
(புதிய பிரதி)

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி
10-30, 2-15 4-45, 7-00
Bruce Lee in
FIST of FURY
(Adults Only)
புரூஸ்லியின் திகிலூட்டும் பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த படம். இதுவே யாழ். நகரில்கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.

**ஹரன்** (யாழ். நகர்)
10-30, 2-30,
4-30, 6-15
Bruce lee in
DRAGON STRIKES AGAIN
ஆரம்பம்முதல் இறுதி வரை குவ்பூ, கராட்டி சண்டைகள் உங்களை வியப்பில் ஆழ்த்தும்

**வின்ஸர்** (யாழ்)
10.30, 2.00, 4 30, 6.45
EBONY IVORY AND JADE
3 வெவ்வேறு அழகிய பெண்கள் ஒரே பாணியில் சண்டை போடும் திகிலூட்டும் விறுவிறுப்பான சண்டைக்காட்சிகள் நிறைந்த வண்ணச் சித்திரம்.
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
3 முதல்
THE BODY

**லிடோ** சினிமா
Daily 4 Shows
CONAN THE BARBARION

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45
THE WARRIORS
(Strictly for adults)

27 To 30
**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30 only
CHARLES BRONSON
LEE MARVIN in
**Death Hunt**
Action-Packed-Adventure
இரண்டு குழுவினருக்கிடையில் ஏற்படும் இத்துப்பாக்கிச் சண்டையின் முடிவுதான் என்ன?

# புதியரக குரக்கன்: கூடுதல் விளைச்சல்!

(மாவிட்டபுரம்)

புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட குரக்கன் நல்ல விளைச்சலை அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். விவசாயப் பகுதியினர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக மாவிட்டபுரம் விவசாய விசாலிப்பு அதிகாரி திரு. கா. கந்தசாமி நான்கு விதமான குரக்கன் விதைகளைப் பரீட்சார்த்தமாக வீமன்காமம் வடக்கு வி. தவராசா என்பவருடைய விவசாய நிலையத்தில் நாட்டினார்.

குறிப்பிட்ட காலத்தில் நாட்டப்பட்ட கே. 5, சி. ஒ. 10, கே. எம். 1, வி. ஆர். 433 என்ற நான்குவிதமான குரக்கனும் ஒரே நேரத்தில் அறுவடை செய்யப்பட்டபோது சி. ஒ. 10 என்ற இனமே சிறந்ததாக விளைந்துள்ளது கண்டு பிடிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு கிருஷ்ணபிள்ளை நேரடியாக மேற்படி தோட்டத்துக்கு விஜயம் செய்து பயிரிடப்பட்ட குரக்கனைப் பார்வையிட்டார்

மேற்படி இன குரக்கனையே விவசாயிகள் பயிரிட்டுக் கூடுதல் இலாபத்தைத் பெறும்படி விவசாயிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

# "சாரணர் இயக்கத்துக்கு முன்னுரிமை வேண்டும்"

(ஊரெழு)

''சாரணர் இயக்கத்திற்கு சகல பாடசாலைகளிலும் அதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும் சரியான வகையில் பயிற்சி அளிக்கப்பட்டு சாரணியம் வளர்க்கப் படுமானால் மாணவ சமுதாயம்சிறப்புடன் திகழும் என்பதில் சந்தேகமில்லை.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற காங்கேசன்துறை மாவட்ட குருளைச் சாரணர் வருடாந்த விழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு மு.கந்தையா மேற்கண்டவாறு கூறினார்.

குருளைச் சாரணர் சங்க செயற்குழுத் தலைவர் திரு ஏ. மகாதேவன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் தெல்லிப்பளை மாவட்ட வைத்திய அதிகாரி திரு எஸ்.கதிரவேற்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டதுடன், போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும் வழங்கினார்.

விழாவில் குருளைச் சாரணர் சங்க செயற்குழு செயலாளர் திரு கே.இரத்தினவேல் வரவேற்புரை நிகழ்த்தினார். சாரணர் இயக்க மாவட்ட ஆணையாளர் திரு இ.விசுவநாதன், திரு நா.போஜன் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டு பேசினார்கள். இந்த விழாவில் பன்னிரெண்டு பாடசாலைகள் கலந்து கொண்டதுடன், ஐந்து பாடசாலைகள் பார்வையாளர்களாகக் கலந்து .கொண்டன

குருளைச் சாரண உதவி மாவட்ட ஆணையாளர் திருமதி ஆர். இரத்தினவேல் நன்றியுரை வழங்கினார்.

சகல போட்டிகளிலும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி முதலாவது இடத்தையும், மயனிப்பாய் சென். ஆன்ஸ் கல்லூரி இரண்டாவது இடத்தையும் தெல்லிப்பளை தந்தை செல்வா தொடக்க நிலை பாடசாலை: வீமன்காமம் மகா வித்தியாலயம், கொல்லங்கலட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை என்பன மூன்றாவது இடங்களையும் பெற்றன.

## பிரதம நீதியரசர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுவார்.

61 வயது நிரம்பிய திரு. சர்வானந்தா யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று, 1946ம் ஆண்டு சட்டத்தரணித் தொழிலில ஈடுபட்டார். பின்னர் 1974ம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

இவர் பலதடவைகள் பதில் பிரதம நீதியரசராகவும் கடமையாற்றியுள்ளார்.

பிரதமநீதியரசராகும் முதல் தமிழர் என்ற பெருமையும் திரு. எஸ். சர்வானந்தாவுக்குக் கிடைக்கிறது.

## திசைமாறும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆராயப்படும்.

தமிழகமீனவர்கள் இவ்வாறு கைது செய்யப்படும்போது அவர்களை விடுதலைசெய்வது தொடர்பாகவும், கைப்பற்றப்படும் படகுகளை விடுவிக்க எத்தகைய வழிமுறைகளைப்பின் பற்றுவது என்பது பற்றியும் பொதுவான கோட்பாடு ஒன்றை ஏற்படுத்த இந்த அதிகாரிகள் தமது பேச்சுக்களில் முடிவு செய்வார்கள்.

இத்தகைய பிரச்னைகள் ஏற்படும்போது இருநாடுகளுக்குமிடையில் நல்லுறவு அதிகாரிகள் பரஸ்பரம் அனுப்புவது பற்றியும் பேசப்படும்.

இத்தகவல்களை தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் நேற்று சென்னையில் தெரிவித்தார்,

''தமிழக மீனவர்கள் இவ்வாறு இலங்கை கடல்பிராந்தியங்களில் மீன் பிடிக்கும் போது இலங்கை கடற்படையினரால் பலவித இன்னல்களுக்கு ஆளாகின்றார்கள்'' என்றும் அவர் தெரிவித்தார்.

## மட்டுநகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தன, பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையிடம் உறுதியளித்துள்ளார்.

ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்போர் குறித்து ஜனாதிபதியை அமைச்சர் செ. இராசதுரை நேற்று நேரில் சந்தித்து நீண்டநேரம் உரையாடினார்.

மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய பகுதிகளில் ஆயுதப்படையினரால் கைதாகி தடுத்து வைத்திருப்போரை துரிதகதியில் விசாரணை நடத்தி விடுதலை செய்யுமாறும், வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்று விமானத்தில் கொழும்புக்கு வருவோரும். வெளிநாடு நாடுகளிலிருந்து விடுதலைக்காக இலங்கை வருவோரும் மற்றும் தொழில் விஷயமாக நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு வருவோரும் சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்டு வருகின்றனர் என்றும் இதன் மூலம் பல சிரமங்களுடன் பாதிப்புகளும் ஏற்படுகின்றது என்றும் இது சம்பந்தமாக ஒரு ஒழுங்கு முறையைக் கொண்டுவருமாறும் இச்சந்திப்பின்போது ஜனாதிபதியை பிரதேச அபிவிருத்தி அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பலபாகங்களிலும் வாழும் பெற்றோர் மற்றும் பொது நலசங்கங்கள் இவ்விஷயமாக தமது கவனத்திற்கு அடிக்கடி கொண்டுவருவதாகவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அமைச்சருக்கு ஜனாதிபதி அளித்த உறுதிமொழியில்; எவரையும் வீண் சிரமத்துக்கு ஆளாக்குவதை தாம் விரும்பவில்லை என்றும் தாமதமில்லாமல் இவ் விஷயமாக உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியையும் அமைச்சர் செ. இராசதுரை சந்தித்து திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கைதானோர் பற்றிய விசாரணைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

## புத்தபிக்குவின்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள், மேற்கொண்டு தகவல் எதனையும் தெரிவிக்கவில்லை

சில ஏஜன்ஸி செய்தி நிறுவனங்களின் ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகளின்படி படுகொலை செய்யப்பட்ட ஜப்பானிய புத்தபிக்குவின் பெயர் யொகொட்சுகாடிரானி என்றும், இவருக்கு சுமார் ஐம்பது வயது இருக்கலாம் என்றும் தெரியவருகிறது.

## இனஅமைதி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாகப் பிரார்த்தனை நடத்தப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

பூபால ஆசிரம ஸ்தாபகர் சுவாமி பிரேமானந்தாஜியின் ஆசியுடனும் அங்கீகாரத்துடனும் அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் இந்த யாகப் பிரார்த்தனை சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டமொன்று அண்மையில் நடைபெறவிருக்கிறது. இது குறித்து சுவாமி பிரேமானந்தாஜியின் அடியார்களும் மற்றும் சமயப் பிரமுகர்களும் விரிவான ஒழுங்குகளை செய்துவருகின்றனர் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ள விரும்புவோர், யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வருடந்தோறும் நவம்பர் மாதம் தமது பிறந்தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடும் சுவாமி பிரேமானந்தாஜி, இவ்வருடம் தமது பிறந்த நாளை யாகப் பிரார்த்தனையில் ஈடுபடுத்த முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் சுற்று விஜயம்செய்யும் சுவாமிகள், அடுத்த மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வந்து யாகப் பிரார்த்தனையை முன்னின்று நடத்துவார்.

## செம்மணி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராசா இறந்தவரின் சடலத்தை யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில், பிரேதபரிசோதனைக்காக வைக்கும்படி உத்தரவிட்டார். சடலம் பலத்தபாதுகாப்புடன் எடுத்து வரப்பட்டு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில்வைக்கப்பட்டுள்ளது.

இவரின் மரணவிசாரணை இன்று நடைபெறவுள்ளது.

(மா)

## கடத்தப்பட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு முன்பாக வைத்து ஜீப் வண்டியை விலகிச் சென்றதாகவும், அப்பொழுது திடீரென ஜீப்வண்டி நிறுத்தப்பட்டு அதிலிருந்தவர் பாய்ந்து தப்பி ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது. ஜீப் வண்டியை இராணுவத்தினர் கைப்பற்றிக் கொண்டனர்

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் அப்பகுதியில் கடும் சோதனைகள் மேற்கொண்டனர்.

### குண்டு வெடித்தது

அதே சமயம் அவ்விடத்துக்குச் சமீபமாகக் குண்டு ஒன்று வெடித்தது. இராணுவத்தினரின் சோதனை அப்பகுதியில் விஸ்தரிக்கப்பட்டது.

சைக்கிள்களில் சென்ற சிலர் தாக்குதலுக் குள்ளானதாகவும் சிலரின் சைக்கிள்கள் நெரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

சிலர் கைக்கடிகாரம், ரொக்கப்பணம் போன்றவற்றையும் இழந்துவிட்டதாகவும் முறையிட்டுள்ளனர்

கோண்டாவில் கொக்குவில் பகுதிகளிலும் இராணுவத்தினர் தொடர்ந்தும் சோதனை நடாத்தினர்.

நாச்சிமார் கேவிலடியில் வைத்து தாக்குதலுக்குள்ளான ஜெயராசா (22 வயது) இளைஞர் ஒருவர் அடிகாயங்களுடன் யாழ் ஆஸ்பத்தரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [மா]

## கத்தோலிக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிஷப் எஸ். மார்க்கஸ் பெர்ணண்டோ விடுத்த அறிக்கையில்; ''இத்தகைய மிருகத்தனமானவன் செயல்கள் மூலம் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி தமது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள இந்தக்குழுவினர் முயற்சி செய்கிறார்கள் என்றும் வன்செயல்மூலம் பிரச்னைகளைத்தீர்க்க முடியாது என்றும் இது குறித்து மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் ''என்றும் தெரிவித்துள்ளார்.

சர்வமத செயலாளர் நாயகம் வண வல்பொல ராகுல தேரோவும் இச்சம்பவம் குறித்து பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும், BERLIN செல்ல விமானச் சீட்டுக்களை உடனடியாகப் பதிவு செய்வதற்கும்.



**AIR-TRANSIT**

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங், 2-வது மாடி, கொழும்பு-1. போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். போன்: 22689

### நிமாலினி மரண விசாரணை:

# "பிரேக்' பிடிக்கவுமில்லை காரை வெட்டவுமில்லை"

—மாணவன்

## சாரதிக்கு தொடர்ந்து ரிமாண்ட்

(யாழ்ப்பாணம்)

''வேகமாக கார் வந்து மாணவிகள் மீது மோதியது. சாரதி பிரேக் பிடிக்கவுமில்லை, காரை வெட்ட எத்தனிக்கவுமில்லை''

நாச்சிமார் கோவிலடி கார் விபத்தில் பலியான பெரியபுலம் பாடசாலை மாணவி வீ. நிமாலினியின் மரண விசாரணையில் சாட்சியமளித்த அதே பாடசாலை மாணவனான விஜயன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் நீதிமன்றத்தில் யாழ் மேலதிக நீதவான் கே. பி எஸ். வரதராஜா முன்னிலையில், நேற்றுக்காலை மரண விசாரணை நடைபெற்றது.

உதயகுமார் என்பவர் சாட்சியமளிக்கையில், சம்பவதினம் 2 மணிக்கு சைக்கிளில் வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறைப்பக்கமாக கார் ஒன்று வந்ததாகவும், அதேசமயம், 3 மாணவிகள் யாழ்ப்பாணம் நோக்கி ரேட்டின் வலதுபக்கமாக வந்து கொண்டிருந்ததாகவும் கூறினார்.

''தான் திரும்ப எத்தனித்தபோது, காரைக் கண்டுவிட்டு சைக்கிளை நிறுத்தியதாகவும் அப்போது காரின் வலது பின்பக்க கதவு திறக்க, சாரதி பின்பக்கம் திரும்பி கதவை சாத்தமுற்பட்டபோது, கார் ரேட்டை விட்டு விலகி மேற்குக் கரைக்குச் சென்று 3 மாணவிகளையும் மோதியதாக கூறினார்.

நாச்சிமார் கோவில் வீதியில் அந்நேரம் மற்றொரு கார் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் ஒரு மாணவி ரேட்டில் விழ மற்றும் இரு மாணவிகள்' இரு கார்களுக்கிடையிலும சிக்கியதாகவும் அவர் மேலும கூறினார். சம்பவத்தினை மாணவியின் பெற்றேருக்கு அறிவித்ததாகவும் கூறினார்,

கார்ச் சாரதி பிச்சையப்பாவை இம்மாதம் 31ம் திகதி தொடர்ந்து ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். (க)

## இன்றும் நாளையும் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வித் திணைக்களம் முறைசாராக் கல்வித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோருக்கான கருத்தரங்கை இன்றும் நாளையும் யாழ். புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரியில் அமைந்த கோப்பாய் கல்வி மூலவள நிலைய விரிவுரை மண்டபத்தில் நடத்துகின்றது.

இக்கருத்தரங்கில் சகல வட்டாரக் கல்வியதிகாரிகளும், முறைசாராக் கல்வி கற்பிக்கப்படும் பாடசாலை அதிபர்கள், போதனாசிரியர்கள், ஒழுங்குபடுத்தல் போதனாசிரியர்கள் ஆகியோர் தவருது பங்குபற்றுவார்கள். கருத்தரங்கில் யாழ் மாவட்டக்கல்விப்பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை பிரதம கல்வியதிகாரி திரு. வெ. சபாநாயகம், கணக்காளர் திரு. வி. யோசவ், வட்டாரக் கல்வியதிகாரி திரு ச. சுப்பிரமணியம், வட்டாரக் கல்வியதிகாரி செல்வி ரி. பெரியதம்பி ஆகியோர் பங்குகொண்டு விரிவுரையாற்றுவார்கள்.

## வல்வையில் மீண்டும் பொதுமக்கள்மீது தாக்குதல்?

### பிரஜைகள் குழு முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பகுதியில், ஆயுதப்படையினரால் பொதுமக்கள் தாக்கப்படுவது வீடுகள் சோதனையிடுவது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறுவதாக வல்வை பிரஜைகள்குழு, இணைப்பதிகாரிக்கு முறையிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறைப் பந்தியடி என்னுமிடத்தில் வைத்து இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் பலமாகத்தாக்கப்பட்டதால் பலத்த காயமடைந்து தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், மற்றும் 6-7 இளைஞர்கள் தாக்குதலுக்குள்ளானதாகவும் பிரஜைகள்குழு பிரதிநிதி ஒருவர் சொன்னர்.

ஆயுதப்படையினரால் ஊரிக்காட்டில் உள்ள வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கும் ஒரு முகவர்வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டு பலத்தசோதனையிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மற்றும் அடுத்துள்ள நான்கு வீடுகள் சோதனையிடப்பட்டதாகவும், அப்பொழுது நில அளவையாளராக வேலைசெய்யும் இளைஞர் ஒருவர் தாக்குதலுக்குள்ளாகி தெல்லிப்பழை ஆஸ்ப்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இச்சம்பவங்களால் இப்பகுதியில் பதட்டநிலை மீண்டும் ஏற்பட்டுள்ளதாகவும் அப்பிரதிநிதி கவலை தெரிவித்தார். (மா)

## போலித் துப்பாக்கியை விட்டுச் சென்றனர்!

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கில் இடம் பெற்ற ரூபா எழுபத்திஐயாயிரம் ரூபாபெறுமதியான நகைக் கொள்ளையின்போது கொள்ளையர்கள் விட்டுச்சென்றுள்ள போலித்துப்பாக்கி ஒன்று ஊர்காவற்றுறை பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலைக்கலவரத்தினுல் பாதிக்கப்பட்டு மகனையும் பறி காடுத்ததினுல் கடும் சுகவீனமுற்று வேலணையில் வசித்துவந்த சிவசுப்பிரமணியம் என்பவர்வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை கொள்ளை நடந்தது.

இக்கொள்ளையை நடத்தியவர்கள் முகமூடிக் கொள்ளையர்கள்.

தம்முடன் கொண்டுவந்த போலித்துப்பாக்கியை தவற விட்டுச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்களைக் கண்டதும் வீட்டுகாரர் சத்தமிட்ட போதிலும் யாருமே உதவிக்கு செல்லவில்லையாம். அப்படி யாராவது உதவிக்கு சென்றிருந்தால் கொள்ளையைத்தடுத்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## துன்னலை கொலைவழக்கு: எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

துன்னலை கொலை வழக்கில் ஜூரிசபையினர் 5-2 ஆகப்பிரிந்து தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் நடைபெற்றது

இவ்வழக்கில் துன்னலையில் 79 ஆகஸ்ட் 4-ம் திகதி கிருஷ்ணன் வனதனம், ஆறுமுகம் ஆரம் என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். தவராசா ஆஜராஞர் அரச தரப்பில் அரச சட்டத்தரணி கே. ஸ்ரீஸ்கந்தராசா வழக்கை நடத்தினர்.

### இராணுவம் சோதனை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை, மானிப்பாய் ஆகிய இடங்களில் ஆயுதப் படையினர் நேற்று தீவிர சோதனை நடத்தினர் இச்சோதனையின்போது சில இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

### யாழ். ஆஸ்பத்திரியில். .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக்கருதி அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல ஏற்பாடுசெய்யப்பட்டது.

வவனியா ஆஸ்பத்திரியிலிருந்து 'அம்புலன்ஸ்' வண்டி வந்து நேற்றுக்காலை 7 மணியளவில் அவர் வண்டியில் ஏற்றப்பட்டதாகவும் அவர் மனைவியும், தாயாரும் ஏறிக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

அதே நேரத்தில் இயந்திரத்துப்பாக்கியுடன் அங்கு வந்த நான்கு இளைஞர்கள் அவரைக் கடத்தியதாகக் கூறப்படுகிறது. ஒருவர் சாரமும் மற்றுப் மூவர் கால்சட்டையும் அணிந்திருந்தார்களாம்

இயந்திரத் துப்பாக்கியுடன் வந்த இளைஞர்கள் 'அம்புலன்ஸ்' சாரதியை இறங்கச் சொன்னதும், சாரதி இறங்கியதாகவும். பின் தாயாரையும், மனைவியையும் இறங்கச் சொன்னதாகவும், அவர்களும் இறங்கியதாகவும் கூறப்படுகிறது.

பின்னர் இளைஞரில் ஒருவர் அம்புலன்ஸை காயமடைந்தவருடன் வேகமாக ஓட்டிச் சென்றதாகவும், எல்லாச் சம்பவங்களும் சில நிமிடங்களில் நடந்து முடிந்ததாகவும் கூறப்படுகிறது. (க)

## தபாலகத்தில் நடந்த அட்டகாசம்

### பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு

(கொக்குவில்)

கொக்குவில் தபாலகத்தில் நேற்று நண்பகல் இனந்தெரியாத நபர்கள் நடத்திய அட்டகாசத்தினுல் வழமையான தபாலகவேலைகள் பாதிக்கப்பட்டு, பொதுமக்கள் பெரும் சிரமத்துக்குள்ளானர்கள்!

கொக்குவில் தபாலகம், நண்பகல் வழக்கம்போல் முன்கதவு மூடப்பட்டு பாதுகாப்புக் கருதி மாற்றுவழியாக கருமங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இனம் தெரியாத இருவர் பின்கதவு வழியாக பலவந்தமாக நுழைந்து கைத்துப்பாக்கியையும் மற்றும் சில பொருள்களையும் காட்டிப் பயமுறுத்தி அட்டகாசப் புரிந்தனராம்.

இதன்விளைவாக நேற்று நண்பகலுக்குப் பின்னர் தபாலகத்தில் கருமங்கள் எதுவுமே நடக்கவில்லை. தபால்நிலையத்துக்கு வந்த பொதுமக்கள் மிகுந்த சிரமப்பட்டனர்.

பொதுமக்களின் நலன்கருதி இவ்விதமான செயல்கள் தவிர்க்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மீனவர் வழக்கு

## 5ம் திகதிவரை ஒத்திவைப்பு

### கடற்றெழில் அதிகாரிக்கு 'நோட்டீஸ்' பிறப்பிக்கப்பட்டது

(அநுராதபுரம்)

மன்னர் கடலில் கைதுசெய்யப்பட்ட 17 தமிழக மீனவர் காப்டன்கள் தொடர்பான வழக்கு விசாரணையில் நேற்று நீதிமன்றத்தில் சமுகம்கொடுக்காத மாவட்ட கடற்றெழில் விரிவாக்க அதிகாரிச்கு எதிராக நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பித்துள்ளது.

இவ் வழக்கு அநுராதபுரம் மேல்நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுச்கப்பட்டது.

17 காப்டன்கள் சார்பில் இந்திய தூதுவராலய சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஆஜராகியிருந்தார்.

வழக்கு விசாரணையின்போது இந்த மீனவர் காப்டன்களை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்த மாவட்ட கடற்றெழில் விரிவாக்க அதிகாரி நீதிமன்றத்துக்கு வரவில்லை. அத்துடன் இந்த வழக்குக்கு பொறுப்பான மன்னர் பொலிஸாரும் சமுகம் கொடுக்கவில்லை.

இந்த சமயத்தில் மீனவர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் 'இந்த வழக்கிற்கு முக்கிய பொறுப்பானவர்களான மாவட்ட கடற்றெழில் விரிவாக்க அதிகாரியும், மன்னர் பொலிஸாரும் நீதிமன்றத்துக்கு வரவில்லை. வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களில் சிலவற்றுக்கு ஆதாரம் எதுவுமில்லை. சில குற்றச்சாட்டுக்களில் முழு விபரமும் தெரிவிக்கப்படவில்லை என்பதினுல் எதிரிகளை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று தெரிவித்தார்.

இவரது வாதத்தை அரச சட்டத்தரணி ஆட்சேபித்தார் இதனை தொடர்ந்து நீதிபதி வழக்கை அடுத்தமாதம் 5ம் திகதிக்கு ஒத்திவைத்து இத்தினத்தில் கடற்றெழில் விரிவாக்க அதிகாரி நீதிமன்றத்துக்கு சமுகம் கொடுக்காதிருந்தால் எதிரிகளை விடுதலை செய்வதாக தெரிவித்து மேற்படி அதிகாரிக்கு நோட்டீஸ் பிறப்பித்தார்.

## காரைநகர் துறைமுகத்தில் கடற்படை சோதனை

(காரைநகர்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒருமணிமுதல் 6-30 வரை காரைநகர் துறைமுகப் பகுதி கடற்படையினரால் சோதனையிடப்பட்டது,

துறைமுகத்தைச்சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள வீடுகளும், பிரதான பாதைகளும் கடற்படையினரால் சோதனையிடப்பட்டது,

அன்று அதிகாலை காரைநகர்-யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபட்டிருந்த வாகனங்களும், மினிவான்களும் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டன

இதனுல் சில வாகனங்கள் காரைநகர் துறைமுகத்திற்கு வராது, வலந்தலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டுச் சென்றன.

துறைமுகத்தில் அமைந்துள்ள தனியார் கடைகளும் கடும் சோதனைக்குள்ளாகின.

### ஜப்பான் பிக்கு. ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றபோது காயங்களுடன் அவர் கிடந்தார். நான் படம் எடுத்துவிட்டுசடலத்தையாழ் ஆஸ்பத்திரி சவச்சாலையில் ஒப்படைத்தேன்

''ஆனைக்கோட்டை' சம்பவத்தின்போது அவரை எனக்குத் தெரியும் அவரின் பெயர் தெரியாது அவரின் சடலத்துடன் பாஸ்போட், அடையாள அட்டை எதுவும் இருக்கவில்லை ''

மரணவிசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

### எம். ஜி. ஆர். குணமடைகிருர்

(சென்னை)

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் உடல்நிலையில் தொடர்ச்சியான முன்னேற்றம் காணப்படுகிறது என்று நேற்று வெளியிடப்பட்ட மருத்துவமனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஊருக்குப்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு, மரணவிசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (க)

### கிளிநொச்சியில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக் குட்படுத்தப்பட்ட பலர் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்

**வீடுகள் தீக்கிரை**

ஸ்கந்தபுரத்தில் சில வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. ஆயுதப்படையினர் இதைச்செய்ததாகக் கூறப்படுகின்றன.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் -30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.